பக்கங்கள்: பதினாறு + IV = 20

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 26 செவ்வாய்க்கிழமை (11.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 258

# கே.பியை ஒருபோதும் இலங்கை இந்திய அரசிடம் ஒப்படைக்காது

## விரும்பினால் இங்கு வந்து விசாரிக்கலாம் என்கிறார் கெஹலிய



கண்டி, ஓகஸ்ட் 11

புலிகளின் முக்கியஸ்தரான கே.பி. என்று அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதனை இலங்கை அரசு ஒருபோதும் இந்தியாவிடம் ஒப்படைக்காது என்று அமைச்சரும் பாதுகாப்புப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

"வேண்டுமானால் அவர்கள் (இந்திய அதிகாரிகள்) இங்கு வந்து விசாரித்துவிட்டுப் போகலாம். ஆனால் நாங்கள் விசாரணைக்காகவோ, வேறு தேவைகளுக்காகவோ கே.பியை இந்தியாவிடம் கையளிக்க மாட்டோம்" என்றும் அவர் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவ மணிகளே!**

இன்று ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உதயனின் கல்வீச் சுடர் மாணவர்களும் மற்றும் மாணவர்களும் சிறப்புச் சித்திகள் அடைந்து மேன்மை பெற உதயனின் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

**கல்விச்சுடர்**

**உள்ளே**

- ★ தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையின் மாதிரி வினாத்தாள்கள்
- ★ ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைக்கான பௌதீகவியல், இரசாயனவியல்.

## கே.பியின் கைது குறித்த தகவல்களை வெளியிட மலேசியப் பிரதமர் மறுப்பு

கொழும்பு, ஓக. 11

கே.பியின் கைது குறித்த தகவல்களை வெளியிடுவதற்கு மலேசியப் பிரதமர் நஸிப் நஸார் மறுத்துவிட்டார்.

கே.பி. மலேசியாவில் கைது செய்யப்பட்டாரா, இல்லையா என்பதை உறுதியாகக் கூறுவதற்கு தம்மால் முடியாதுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவில் கே.பி. கைது செய்யப்பட்டிருந்தால் அல்லது கடத்தப்பட்டிருந்தால் அதுகுறித்து மலேசிய அரசு விளக்கம் தரவேண்டும் என்று வெளிநாடுகளிலுள்ள புலிகள் கோரியிருந்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். — கொழும்பு பஸ் சேவைக்கு செயலகத்தில் பதிவு செய்யத்தேவையில்லை

### கட்டணம் 1,000 ரூபாவாக குறைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக . 11

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பஸ் மூலம் பயணம் மேற்கொள்பவர்கள் செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சபையின் ஐந்து பஸ்கள் ஏ-9 வீதி ஊடாக மதவாச்சி வரை பயணிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தச் சேவையில் பயணம் மேற்கொள்பவர்களின் பதிவுகள் இதுவரை யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுவந்தன.


எனினும் இனிமேல் யாழ். செயலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளத் தேவையில்லை என்றும் பயண அனுமதியுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு சென்று பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் செயலகம் நேற்று அறிவித்துள்ளது.

தற்சமயம் சேவையில் ஈடுபடும் சொகுசு பஸ்களுக்கான பயண ஏற்பாடுகள் யாழ். ரயில் நிலையப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரசபையில் ஆட்சி அமைக்க முஸ்லிம் காங்கிரஸின் உதவியைப் பெறப் பேச்சு

### மாவை எம்.பி. தகவல்



வவுனியா, ஓக. 11

வவுனியா நகரசபையில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குமாறு கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேசி வருகிறது என்று தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா நகரசபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றது. வன்முறைகளுக்கு மத்தியிலும் மக்கள் துணிச்சலுடன் எமது கட்சிக்கு வாக்களித்திருக்கின்றார்கள்.

வவுனியா நகரசபையில் எமக்கு 5 ஆசனங்கள் கிடைத்துள்ளன. அங்கு அதி கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற வகையில் நகரசபைத் தலைவர் ஒருவரை நியமிக்குமாறு எமக்கு அழைப்பு

(16ஆம்பக்கம்பார்க்க)

## தமிழ்த் தேசியத்துக்கான குரல் இன்னமும் வலுவாகவே உள்ளது

### தேர்தல் முடிவை சுட்டிக்காட்டி ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு, ஓக. 11

தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டாலும் கூட தமிழீழத் தேசியத்துக்கான குரல் இன்னமும் வலுவாகவே ஒலித்துக்கொண்டிருக்கிறது என்று ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி, வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 08ஆம்திகதி வடக்கில்இடம்பெற்று முடிந்த தேர்தல்களின் முடிவுகளை அவதானித்த பிற்பாடு அவர்கள் இவ்வாறு கருத்துக் கூறுகின்றனர். தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளரும், அரசியல் ஆய்வாளருமான ஜெகான் பெரேரா உட்பட்ட முக்கிய

(16 ஆம் பக்கம் பார்க்க)



வெளிச்செல்லும் அழைப்புக்களில் 1800 நிமிடங்கள் இலவசம் !

CDMA பிற்கொடுப்பனவு பக்கேஜில் செலுத்தும் தொகைக்கு உயர் இலாபம் !

1. எந்தவொரு தொலைபேசி வலையமைப்பிற்குமான வெளிச்செல்லும்அழைப்புக்கள் ரூ. 2/-. செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்.
2. தெளிவான டிஜிடல் ஒலி. உரையாடலின் போது இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது.
3. மாதாந்தக் கட்டணம் ரூ. 300/-.

Fixed Line

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெரிக்காவிடமிருந்து அகதிகளுக்கு 4 மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள்

## பிரதித் தூதுவர் மூவரிடம் இருந்து பசில் பெற்றுக்கொண்டார்

கொழும்பு, ஓக. 11

வடக்கில் இடம்பெற்ற மோதல்களின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் விரைவாகத் தத்தமது வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்ல ஆதரவளிக்கும் வகையில் மேலும் ஒன்றரைக்கோடி அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸி (USAID) அறிவித்துள்ளது.

கோதுமை, அவரை வகைகள், மரக்கறி வகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட எண்ணெய் என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸியின் இவ்வருட அத்தியாவசிய உணவு உதவியை வழங்கும் இரண்டாவது கப்பலில் வரும் உணவுகள், ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திடம் (WFP) கையளிக்கப்படும். இவ் வுணவுப் பொருள்கள் 3 லட்சம் மக்களின் நான்கு மாத, அத்தியாவசிய உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்.

இந்த நன்கொடையையும் சேர்த்துப் பார்க்கையில், ஐக்கிய அமெரிக்க அரசின் அபிவிருத்தி ஏஜென்ஸியான, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸி, 2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் உணவு உதவி என்ற வகையில் ஏறத்தாழ 6 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு, ஐக்கிய அமெரிக்க அரசு வழங்கும் முக்கியமான உதவியை ஏற்று அங்கீகரிக்கும் விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் விசேட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ, ஐக்கிய அமெரிக்கப் பிரதித் தூதுவரான ஜேம்ஸ் ஆர். மூரிடமிருந்தும் சர்வதேச அபிவிருத்திக்கான பணிப் பணிப்பாளர் ரெபேக்கா கோனிடமிருந்தும் அவசரகால உணவு உதவியை ஏற்றுக் கொண்டார்.

''மோதல்களினால் இடம்பெயர்ந்த இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய உணவு உதவியை வழங்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் இலங்கை அரசுக்கும் சர்வதேச அபி விருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸி ஆதரவு வழங்குகின்றது'' என்று சர்வதேச அபிவிருத்திக்கான் ஐக்கிய அமெரிக்க ஏஜென்ஸியின் பணிப்பாளர் ரெபேக்கா கோன் கூறினார். (சி)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு புதிய நிர்வாகம் தெரிவு

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு விரைவில் புதிய நிர்வாகம் தெரிவு இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அலுவலர் பிரிவு ரீதியான அங்கத்தினர்களை கொண்டே நிர்வாகம் தெரிவு இடம்பெறவுள்ளது.

இதேவேளை ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகம் கலைக்கப்பட்டு பிரதேச வைத்தியசாலை டாக்டர் தலைமையில் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்படும்.

இதற்கான ஏற்பாட்டை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(1-302)





பருத்தித்துறை வேலாயுத மாகாவித்தியாலய நிறுவுனர் தினம் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிறுவுனர் தின உரையாற்றுவதை முதலாவது படத்திலும் வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளைத் தலைவர் சே.ஏகாம்பரநாதன் தலைமையுரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் கலந்து கொண்டோர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: கர்ணன்)

# அகதிகளின் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்றது அரசு

## சர்வதேச மாநாட்டில் மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 11

வன்னி முகாம்களில் அகதிகளாக வாழும் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை மனித உரிமைகள் ஸ்ரீலங்கா அரசினால் மீறப்படுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து வன்னி முகாம்களில் அகதிகளாக வாழ்கின்றனர். நடமாடும் சுதந்திரம் உட்பட அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் பலவும் அரசினால் மீறப்பட்ட வண்ணம் உள்ளன என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அவர் ''முகாம்களைத் திறந்து விடுங்கள்'' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மன்னிப்புச் சபையால் துருக்கியில் நடத்தப்பட்ட சர்வதேச மாநாடு ஒன்றை ஆரம்பித்து வைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அகதிகள் பலாத்காரமாகவும் ஒரு தலைப்பட்சமாகவும் அரசினால் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசு இம்மக்களை பலாத்காரமாக முகாம்களில் தடுத்து வைத்திருப்பதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதேநேரம், இலங்கை அரசு இம்மக்களின் நடமாடும் சுதந்திரத்தையும் அங்கீகரித்து நடக்க வேண்டும்.

இம்மக்களின் பொருட்டு சர்வதேச சமூகத்தால் வழங்கப்படும் உதவிகளும், நிவாரணங்களும் உண்மையில் மக்களைச் சென்றடைகின்றனவா என்று இந்திய அரசு கண்காணிக்க வேண்டுமெனவும் நாம் கோருகின்றோம்.

இம்முகாம்கள் இலங்கையின் உள்நாட்டு இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்நிலை மாற்றப்பட்டு முகாம்களின் நிர்வாகம், சிவில் அமைப்புகளிடம் கையளிக்கப்பட வேண்டும். இதற்கு இந்திய அரசு இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்- என்றார். (அ-சி)


### 60 ஆவது நாள் நினைவஞ்சலி



**அமரர் மா.குமாரசாமி**

(முன்னாள் தலைவர் . மானிப்பாய் ப.தெ.வ.அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்)

12.08.2009 அன்று இந்தியாவில் காலமான எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் மா.குமாரசாமி அவர்களின் பிரிவால் துயறுரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்,பணியாளர்கள், அங்கத்தவர்கள்
ப.தெ.வ.அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.

### கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை 08 இன் கிளைக்குழு உறுப்பினரும், சங்க பொதுச்சபைப் பிரதிநிதியுமாகிய

**அமரர் மாணிக்கம் இலட்சியன்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயர் அடைகின் றோம். அன்னரீரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக் கும், சுற்றத்தவர்களுக்கும் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

### லண்டனில் உயர் கல்வி வாய்ப்புக்கு அரிய சந்தர்ப்பம்

(புதிய நடைமுறை விசா கிடைக்கப் பெற்றுள்ளோம்)

எமது நிறுவனத்தினூடாக லண்டனில் உயர் கல்வி பயில்வதற்கு புதிய நடைமுறையின் கீழ் விசாவுக்கு (STUDENT VISA) விண்ணப்பித்தவர்களுக்கு விசா கிடைக்கப் பெற்றுள்ளதை மாணவர்கட்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான பண வைப்பு நடைமுறையும் தூதராலயத்; `னால் ஒக்ரோபர் 1ஆம்திகதி வரை தளர்த்தப்பட்டுள் ளதையும் மாணவர்கட்கு தெரியப்படுத்துகின்றோம். பணவைப்பு வங்கியிலிடப்பட்ட மறுநாளே நீங்கள் விசா விண்ணப்பங்களை தூதராலயத்தில் சமர்ப்பிக்க முடியும். 4 வாரங்கள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

செப்ரெம்பர் மாதக் கற்கை நெறிகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். நேரில் சந்திக்கலாம்.

**எந்நேரமும் தொடர்பு : 0774528818**

148, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(யுனிசெவ் முன்பாக)
0212223818

E.Mail : mg 1404 2009 @ yahoo.com


## விஞ்ஞான சங்கத்தின் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ். விஞ்ஞான சங்கம் மாதாந்தம் நடத்தி வரும் கருத்தரங்குத் தொடரில் முதலாவ்து கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'இணையத்தில் தேடுவது எப்படி' என்ற தலைப்பில் கணனி விஞ்ஞானப் பிரிவுத் தலைவர் கலாநிதி ஈ . வை . ஏ . சாள்ஸ் கருத்தரங்கில் உரையாற்றுவார். (1)


### கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 14.08.2009 விநியோகிக்கப்படும் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜின்
கால் நடைத் தீவன விற்பனை நிலையம்
அளவெட்டி . . . சந்தி
T.P.No. 021 222 2867


# வடக்கின் வசந்தம் திட்டங்களின் முன்னேற்றம்; ஆளுநர் தலைமையில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக . 11

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராயும் விசேட கூட்டம் ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி ஏற்பாடுசெய்துள்ளார்.

நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் . நூலக கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் சகல அமைச்சுக்களின் செயலாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

குடாநாட்டில் இயங்கும் திணைக்களங்களின் தலைவர்கள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம், அத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் தடைகள் ஆகியான தொடர் பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட விருக்கின்றது.


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
18 ★ 05 ★ 1998



ஆண்டவன் அடியில்
23 ★ 07 ★ 2008

**சிவகுலசிங்கம் கேசவன்** (வரன்)

திதி: 11.08.2009

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்தும் ஈடாகுமா- உன் அன்புக்கு

நி.மு -8 ஆம் வட்டாரம்,
மடத்து வெளி, புங்குடுதீவு.
த.மு- 36, கண்ணாபுரம்,
நாவாந்துறை. (87751) குடும்பத்தினர்.


### மரண அறிவித்தல்



**கந்தையா நேசம்மா**

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த கந்தையா நேசம்மா நேற்று(10.08.2009) திங்கட் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் ஞானசோதிமலர், ஜெரால்ட், ஜெயபாலரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயும் பாக்கியநாதன், ...ராணி, பிறின்ஸியசோ ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. ஜெயபால்
(மகன்- பிறின்ஸி சில்க்ஸ்).

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தேர்தல் தந்த பாடம்

ஊவா மாகாணசபைக்கும், யாழ். மாநகரசபை, வவுனியா நகரசபை என்பவற்றுக்கும் நடைபெற்ற தேர்தல் மிக முக்கியமானது என்பதற்கான சில காரண காரியங்களைத் தேர்தலுக்கு முன்னர் இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, தமது நிலைப்பாட்டை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இப்பகுதி மக்கள் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கோடிகாட்டி விட்டார்கள் என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆனால் அதனை சம்பந்தப்பட்ட தரப்புகள் - அரசியல் கட்சிகள் - புரிந்துகொண்டுள்ளனவா, சர்வதேசம் உட்பட்ட பார்வையாளர்கள் உணர்ந்துகொண்டார்களா என்பதுதான் இப்போதைய கேள்வியாகும்.

சரியோ, பிழையோ தமிழர் பிரதேசத்தில் இத்தேர்தல் குறிப்பிடத்தக்களவுக்கு நீதியாகவும், நேர்மையாகவும் நடைபெற்றிருக்கின்றது என்பது மறுக்கப்படமுடியாத ஓர் உண்மையாகும்.

தேர்தலில் வெற்றியீட்டிய அணி, வாக்களிப்பு நியாயமாக நடைபெற்றது என்று பூச்சுப்பூசுவதும், தோற்றுப்போன அணிகள், தமது தோல்வியைச் சமாளிப்பதற்குத் தேர்தல் நடைபெற்ற முறைமையின் மீது பழி போடுவதும் வழமையான போக்கே. அந்த வகையில் இத் தேர்தல் குறித்தும் பல்வேறு கருத்து நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊவா மாகாண சபைக்கான வாக்களிப்பைப் பொறுத்தவரை வழமையாகத் தென்னிலங்கையில் தேர்தல்களின் போது அரங்கேறும் திருக்கூத்துகளுடன்தான் அது நடைபெற்று முடிந்திருக்கின்றது. ஆனால் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் அத்தகைய நிலைமை இல்லை. அண்மைக்காலத்தில் இலங்கையில் மிக நேர்த்தியாக - மிகக் குறைந்தளவு வன்முறைகளோடு - முதன் முறையாகத் தமிழர் தாயகப் பகுதியில்தான் தேர்தல் இப்போது நடந்து முடிந்திருக்கின்றது.

தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட சமயத்தில் - ஆரம்பத்தில் - ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல் அப்படியும், இப்படியுமாக வெளிப்பட்ட போதிலும் அதன் பின்னர் ஓரளவுக்கு விடயங்கள் நேர்த்தியாக இடம்பெற்றிருக்கின்றன. தனிப்பட்ட அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மிகமிகக் குறைவாகவே இடம்பெற்றிருக்கின்றன. தேர்தல் சட்ட விதிகள் குறிப்பாக வாக்களிப்பு சமயத்தில் மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆள் மாறாட்டங்கள், மோசடிகள் இல்லை என்று கூறுமளவுக்கு நிலைமை இருந்திருக்கின்றது.

இப்படித் தேர்தலைத் தேர்தலாக நடத்தி முடித்தமைக்காக அரசுத் தலைமை முதல், தேர்தல் ஆணையாளர், அவரது பணியாள் தொகுதியினர், அரச அதிபர், தேர்தல் அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வேட்பாளர்கள் வரை அனைவருமே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த - குறிப்பாக முஸ்லிம் மக்களும் - யாழ். மாநகரசபையின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்ற முறையாக வாய்ப்பளிக்கப்பட்டமையும் விதந்துரைக்கப்படத்தக்கதாகும்.

இனி, இந்தத் தேர்தல் முடிவு மூலம் மக்கள் உணர்த்தியிருக்கும் கருத்தைப் பார்ப்போம். அக்கருத்துக்கள் தெளிவானவை; வெளிப்படையானவை.

தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை யுத்தம் மூலம் வெற்றிகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைக்கு தென்னிலங்கையில் பெரு வரவேற்பும், செல்வாக்கும், ஆதரவும் உண்டு என்றும் தென்னிலங்கை சிங்கள மக்கள் அவரின் பின்னால் திரண்டுள்ளனர் என்றும் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றமையை ஊவா மக்களும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் இது.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தலில் பெயரளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வென்றாலும் பதிவுசெய்யப்பட்ட சுமார் 25 ஆயிரம் வக்குகளில் வெறுமனே 4,300 வாக்குகளை மட்டும் பெற்றுக்கொண்டு மக்களின் தனித்துவப் பிரதிநிதிகள் தாங்களே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிமைகோர முடியாத நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதுபோல அரசுத் தரப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வவுனியா மக்கள் உணர்த்தி விட்டார்கள்.

இதுபோன்று யாழ். மாநகர மக்கள் வெளிப்படுத்தியிருக்கும் கருத்தும் ஆழம் மிக்கது.

அங்கு ஆக 20 வீத வாக்களிப்பு மட்டுமே நடந்திருக்கின்றது. 'நடந்தவற்றைப் பார்த்துக் கவனத்தில் எடுத்து நாம் இப்போது மதில் மீது அமர்ந்திருக்கின்றோம். இப்போது உங்களில் யாருக்கும் நாம் ஆதரவு தரத் தயாரில்லை. உங்கள் செயற்பாடுகளை இனியும் - இன்னமும் - அவதானித்தே முடிவு எடுப்போம்!' - என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார்கள் அந்த மக்கள்.

குடாநாட்டிலிருந்து இடம்பெயர வைக்கப்பட்டவர்களின் ஆதரவுடன் ஈ.பி.டி.பியும் ஆளும் தரப்பும் பெற்ற வெறும் 10 ஆயிரத்து 600 வாக்குகள் அந்த மக்களின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் தாமே என வெளிப்படையாக மார்தட்ட அவர்களுக்கு உதவினாலும் தார்மீக ரீதியாக அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

அதேசமயம், தமிழ்த் தேசியம் பேசி வலியுறுத்தி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆக எட்டாயிரம் வாக்குகளே கிட்டியிருக்கின்றன.

ஆக, பல்வேறு சலுகைகள், உதவிகள், அபிவிருத்திகள், வேலைவாய்ப்புகள் மற்றும் முகாம்களில் முடக்கப்பட்டுள்ள பொதுமக்களை விடுவித்தல் பற்றிய பரப்புரைகள் போன்ற 'வளைத்துப் போடும்' அறிவிப்புகளுக்கு நாம் எடுபடமாட்டோம் என்பதை ஒருபுறத்திலும் -

வெறுமனே 'தமிழ்த் தேசியம்' என்ற உணர்ச்சியைத் தூண்டும் வாய்ப் பேச்சுப் பரப்புரைக்கும் நாம் அவியமாட்டோம் என்பதை மறுபுறத்திலும் -

வெளிப்படுத்தி உணர வைத்துவிட்டு, மதில் மேல் பூனையாகத் தாங்கள் இருக்கின்றமையை தமிழர் தாயக மக்கள் 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற மாதிரி யாழ். மற்றும் வவுனியாத் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றார்கள்.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் பெரு வெற்றி தெற்கில் - ஊவாவில் - ஜனாதிபதி தலைமைக்கு. தமிழர் தாயகத்தில் தேர்தல் வெற்றியை எத்தரப்புக்கும் கொடுக்க மறுத்து நிற்கும் மக்களுக்கு. சம்பந்தப்பட்டோருக்கு இது புரிந்தால் சரி..........!

# நாடளாவிய ரீதியில் உயர்தரப் பரீட்சை 1,827 நிலையங்களில் இன்று ஆரம்பம்

## நலன்புரி நிலைய மாணவர்களும் தோற்றுவதற்கு ஏற்பாடு

அச்சுவேலி, ஓக 11

இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 91 மாணவர்கள் தோற்றுகின்றனர். மாணவர்கள் வசதியான முறையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆயிரத்து 827 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளாக ஒரு லட்சத்து 98ஆயிரத்து 755 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 43ஆயிரத்து 336 மாணவர்களும் தோற்றுகின்றனர். ஆயிரத்து 827 நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. பரீட்சை நிலையங்களுக்கான விநியோக மற்றும் விடைத்தாள் சேகரிப்புக்கு 267 இணைப்பு நிலையங்கள் செயற்படவுள்ளன. அத்துடன் ஒருங்கிணைப்பு நிலையங்கள் 33 நிறுவப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டம் இரண்டு பரீட்சை அலகுகளாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் I, யாழ்ப்பாணம் II என்ற வகையில் பரீட்சை நடைபெறுகின்றன. இரண்டு அலகிலும் தலா 37 பரீட்சை நிலையங்களும், நலன்புரி நிலையங்களில் 5 பரீட்சை நிலையங்களுமாக மொத்தம் 79 பரீட்சை நிலையங்கள் செயற்படுகின்றன. 18 இணைப்பு நிலையங்களும் ஒரு ஒருங்கிணைப்பு நிலையமும் நிறுவப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரிநிலையங்களில் இருந்து 66 மாணவர்கள் இன்று நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு அந்தந்த நலன்புரி நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை, கைதடி, கொடிகாமம், இராமாவில், , குருநகர், கோப்பாய் ஆகிய நலன்புரிநிலையங்களில் உள்ள உயர்தரவகுப்பு மாணவர்களுக்கான பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள் யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களால் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்தன.

தற்போது அந்த மாணவர்கள் இன்று நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கோப்பாயீ ஆசிரியர் கலாசாலை நலன்புரி நிலைய மாணவர்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

பரீட்சை நடைபெறும் காலத்தில் பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரிகள் குழுக்களாகவும், தனியாகவும் பரீட்சை நிலையங்களுக்கு சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

வினாத்தாள் முதலாம் கட்டம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. 2ஆம் கட்டம் உரிய காலப் பகுதியில் எடுத்துவரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9-11)

# நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி

யாழ்ப்பாணம், ஓக 11

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் இன்று ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தாம் பரீட்சைக்கு விண்ணப்பித்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பரீட்சை எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத் தகவலை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டவர்களில் 3 ஆயிரத்து 106 பேர் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் இன்று நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தாம் முன்னர் இருந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பரீட்சையினை எழுதுவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது நலன்புரி நிலையங்களுக்கு குறிப் பிட்ட நேரத்திற்குச் சென்று பரீட்சை எழுதுமாறு அவர் அறிவித்துள்ளார். (50-9)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக 11

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகள் தத்தமது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைய பொதுமக்களின் ஒத்துழைப்பினைப் பெற்று டெங்கு ஒழிப்பினை தீவிரப்படுத்துமாறும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நுளம்பு உருவாகக்கூடிய இடங்களை அழித்து விழிப்புணர்வு செயற்பாடுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207 )

# குணபாலன் வித்தியாசாலையின் அடிப்படை வசதியீனங்களை நிவர்த்தி செய்து தேவைப்படும் வளங்கள் கிடைக்க வகை செய்யக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக11

மாணவர்களுக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் அடிப்படை வசதிகள் கூட இன்றி இயங்கிவரும் எமது பாட சாலையின் நீண்டகாலக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, கல்வி கற்கும் மாணவச் செல்வங்களுக்கு உதவுமாறு உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை அதிபர் எஸ். தனபாலசிங்கம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரைக் கோரியுள்ளார்.

குறித்த பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவரும் குறைபாடுகள், வசதியின்மை பற்றி அமைச்சருக்கும், கல்விப் பணிப்பாளருக்கும் அதிபர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அதிபர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

எமது பாடசாலையில் தரம் 1 இலிருந்து தரம் 9 வரை மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பின்தங்கிய, வசதி குறைந்த மாணவர்களேயாவர்.

கடந்த 50 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட சிறுநீர் கழிக்கும் கூடம் இடிந்து சேதத்திற்குள்ளானதால் மாணவர்கள் அதைப் பாவிக்க முடியாத நிலையில் உள்ளார்கள். சிறுநீர் கழிக்க வசதியில்லாததினால் அங்குள்ள மலசலகூடத்தையே மாணவர்கள் பாவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இது மாணவர்களுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு 2005ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கட்டடத்தில் மேல்மாடி பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றது. நிஷா புயலினால் சேதமடைந்த கட்டடமும் திருத்தி அமைக்கப்படவில்லை. ஒரு மண்டபத்தில் ஐந்து வகுப்புக்கள் இயங்கி வருகின்றன. இதனால் மழை காலங்களில் கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. மாணவர்களின் தரத்திற்கேற்றவாறு கல்வி கற்பதற்குத் தளபாட வசதிகளும் இல்லை. யுனிசெவ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட சிறுவர் முற்றமும் சேதமடைந்துள்ளது.

எமது பாடசாலை கடந்த ஆண்டு பிள்ளைநேயப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசும் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குரிய நூல்நிலையம், தளபாடங்கள், அழகுபடுத்தும் வர்ணங்கள், விளையாட்டு முற்றம் உட்படத் தேவையான வளங்கள் இல்லை. இக் குறைபாடுகளால் மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

எனவே, மாணவர்களின் நலன் கருதி இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரும்படி கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (04-115)

# அஞ்சல் பயிற்சிக் கல்லூரி நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஓக 11

யாழ்.பிரதம தபாலகத்தில் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி நேற்று திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள தபால்மா அதிபர் எம்.கே.பீ.திஸநாயக்க, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து இந்தப் பயிற்சிக் கல்லூரியைத் திறந்து வைத்துள்ளனர்.

தபாலகத்திற்கு வருகை தந்த அமைச்சரும், தபால்மா அதிபரும் மங்கள வாத்திய இசையுடன் அஞ்சல் பயிற்சிக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த அஞ்சல் பயிற்சிக் கல்லூரி மூலம் தபால் பணியாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அஞ்சல் பயிற்சிக்காக முன்னர் தபாலகப் பணியாளர்கள் கொழும்பு செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்: 15 ஆம் பக்கத்தில்) (50-224)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 27 | 12.08.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | மு.ப. 10.28 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | மு.இ.09.18 வரை |
| சுபநேரம்: | 04.34 - 06.04 |
| ராகுகாலம்: | 12.04 - 01.34 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகியை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



### திருமதி
### ருக்மணிதேவி இராஜரத்தினம் (SLTS-1)

(பிரதி அதிபர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி, காப்பாளர், சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்)

சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் போஷகராய் பொறுப்பேற்று சங்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பதினோராண்டுகளுக்கு மேலாகப் பணி செய்து மாதர்கள் மாண்புடன் வாழ தோள் கொடுக்கும் எம் அன்னை சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் மகிமை சேர் பிரதி அதிபர் திருமதி ருக்மணிதேவி இராசரத்தினம் அவர்கள் அகவை அறுபது நிறைவுபெற்று அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் இந்நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு!

முப்பத்தெட்டாண்டுகள் முழுமையான கல்விப் பணியிலே
இருபத்தெட்டாண்டுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரிதனில்
நல்லாசிரியராக, மாண்புறு பிரதி அதிபராக
நாளும் பொழுதும் கடமையே கண்ணாக அர்ப்பணிப்புடன் ஆற்றிய
அளப்பரும் சேவையால் உயர்வுபெற்ற மணிவிழா நாயகியே!
சகல நலன்களும் பெற்று நிறைவுடன் வாழ
இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு!

*சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,*
*சாவகச்சேரி.*

(87753)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### தேவராஜா பிரதீப் B.Sc.

(ICT and Business Queenmary University of London)

காலஞ்சென்ற பொன்னுச்சாமி சிவபாக்கியம்
(உரிமையாளர், பரிமளா ஸ்ரோர்ஸ்)
ஆகியோரின் மூத்த மகன் ஆகிய
தேவராஜா- பரிமளாதேவி தம்பதியரின் மூத்த மகன்
பிரதீப் லண்டன் குயின்மேரி பல்கலைக்கழகத்தில் கடந்த
16.07.2009 அன்றுB.Sc. பட்டம் பெற்றதையிட்டு
மிக்க மகிழச்சி அடைவதோடு மனமார வாழ்த்துகின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (87753)
பிரபாகரன் குடும்பம்
(சின்னமாமா).

## அறிவித்தல்

### பருத்தித்துறை
### ஐக்கிய விளையாட்டுக்கழகம்

எமது பொன் விழாவையொட்டி பின்வரும் விளையாட்டுக்களை யாழ் . மாவட்ட ரீதியில் நடத்தவுள்ளோம்.

1. கரப்பந்தாட்டம் (ஆண்கள்)
2. வலைப்பந்தாட்டம் (பெண்கள்)
3. கபடி (ஆண்கள்)
4. கிரிக்கெட் (ஆண்கள்)
5. கயிறு இழுத்தல் (ஆண்கள்)

விண்ணப்ப முடிவுத்திகதி 20.08.2009

தொடர்புகளுக்கு:
*ஆர் . இராஜேஸ்*
*(பருத்தித்துறை அபிராமி இரும்பகம்)*
*பிரதான வீதி, பருத்தித்துறை.*

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்
செயலாளர் T.P - 0771102912
(சி-560257)

## உள்ளூர் விதை நெல் விற்பனை இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக.11

யாழ். குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் நிதி அனுசரணையுடன் ஒப்பந்த கமக்காரர்கள் மூலம் உற்பத்தி செய்த விதை நெல்லின் விற்பனை அங்குரார்ப்பண வைபவம் இன்று முற்பகல் 11 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி (திருமதி) எஸ். சிவச்சந்திரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம். பற்றிக் டிறஞ்சன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், விவசாய ஆராய்ச்சி பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரத்தினம், சுவிஸ் அபிவிருத்தி நிறுவன தலைமை அதிகாரி ஹன்ஸ் பீற்றர் ஏற்றர், ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அதிகாரி கு.வி. நிசாந்தன், வேள்ட் விஷன் இணைப்பதிகாரி வி.கதிரமலை, கெயர் கள இணைப்பாளர் திருமதி [illegible].ஜி.துரைரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

## சாரதி அனுமதிப்பத்திர பயிற்சியாளர் அட்டை இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக.11

புதிய சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குரிய பயிற்சியாளர் அட்டைகள் (L-Board) கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த சாரதி அனுமதிப் பத்திரம் எழுத்துப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கே வழங்கப்படவுள்ளன.

கீழ் குறித்தொதுக்கப்பட்ட திகதிகளில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான வீதி ஒழுங்குகள் சம்பந்தமான எழுத்துப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு வழங்கப்படும்.

*19.05.2009, 21.05.2009 - 11.08.2009 (செவ்வாய்க்கிழமை) *26.05.2009, 27.05.2009 - 12.08.2009 (புதன்கிழமை), *28.05.2009 - 13.08.2009 (வியாழக்கிழமை) மேற்குறித்த திகதிகளில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த பரீட்சார்த்திகள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் பி.ப. ஒரு மணிக்கு முன்னர் கீழ்குறிப்பிட்ட ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்து பயிற்சி அட்டைகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ்.அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இப் பயிற்சி அட்டைகள் குறிப்பிட்ட நாள்களிலேயே வழங்கப்படும். மோட்டார் சைக்கிள் பயிற்சியாளர்கள் தமக்குரிய பயிற்சி அட்டையை பெறுவதற்கு ரூபா 150 ஐயும் ஏனைய வாகனங்களுக்குரிய பயிற்சியாளர்கள் ரூபா 300 ஐயும் செலுத்தி இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

புகைப்படம் ஒன்று (சாரதி அனுமதிப் பத்திர விண்ணப்பபடிவத்திற்கு சமர்ப்பிக் கப்பட்ட அளவு), பயிலுநர் காப்புறுதிச் சான்றிதழ் (ஒரு வருட காலப்பகுதி யைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்)

ஆகிய ஆவணங்களை கொண்டு வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(1)


**வாடகைக்குண்டு**

கொழும்பில் சகல வசதிகளுடன் கூடிய தொடர்மாடிமனைகள் (Apartments) நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : ராஜ்-0718600034

**காணியும் வீடும் விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதியில் 5½ பரப்பு காணியுடன் கூடிய மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778738978
0778090947, 0771994926

**மாபெரும் கருத்தரங்கு**

இன்று
A/L 2009
அரசியல்
இவ்வாண்டு பரீட்சைக்கான பயன் தரும் வினாக்களும், விடைகளும், விளக்கமும் வழங்கப்படும்
நேரம்:- காலை - 9.00 மணி
உங்கள் பிரபல்யம் பெற்ற ஆசான்
*S.M.* ஜெனா
இடம்:-
[illegible],
யாழ்ப்பாணம் (நாவலர் வீதி)


## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் திறப்புவிழா பிற்போடப்பட்டுள்ளது

எமது சங்கத்தில் நாளை (12.08.2009) புதன்கிழமை நடைபெறவிருந்த எரிபொருள் நிலையம், சிறப்பு கூட்டுறவுநகர் ஆகியவற்றின் திறப்புவிழாக்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறாது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன். திறப்புவிழா திகதி பின்னர் நேரில் அழைப்பிதழ் மூலம் சமர்ப்பிக்கப்படும்.

தலைவர்
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
(சி/560258)

## கண்ணீர் அஞ்சலி



யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
ஆசிரியை திருமதி சகுந்தலாதேவி
அவர்களின் அன்புக் கணவர்

### மாணிக்கம் இலட்சியன்

09.08.2009 அன்று இறைவனடி சேர்ந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.
(சி/560251)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
18.10.1930

ஆண்டவன் அரவணைப்பில்:
12.07.2009

### அமரர் சிற்றம்பலம் வேலுப்பிள்ளை

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரும் சோதிட வல்லுநரும்)*

மாதமொன்று கடந்தாலும் உன் இழப்பு எம் நெஞ்சை
விட்டு அகலாது உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல கதிரமலைச் சிவன்
சிவ பூதராய சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றோம்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

*மீளாத் துயரில் மனைவி மகேஸ்வரி, மகன் நந்தகோபாலன் குடும்பம், மகள் கௌரி கிருபாகரமூர்த்தி குடும்பம், பகிரதன் குடும்பம்.*

## மரண அறிவித்தல்கள்

### அல்பிரட் J. மத்தியாஸ்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அல்பிரட் J.மத்தியாஸ் 09.08.2009 ஞாயிற்றுக்கிழமை கனடா ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - மரியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விக்ரோரியா, றெமிசியார்(கனடா), லூர்த்தம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அலேஸ்பிள்ளை, பீற்றர் (கனடா), புஸ்பம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனோவா (கனடா), மேரிதிரேசா, வலன்ரையின், அந்தோனிப்பிள்ளை, மேரி சந்தானா (ஜேர்மனி), மரியகொறற்றி (கனடா), ஜெயராஜ், மகராஜ், வெலின்டா ஆகியோரின் அன்பு மாமனாரும் புஸ்பராசா (கனடா), றூபி, புஸ்பதாசன், புஸ்பநாதன், ரதி, புஸ்பறூபன், புஸ்பமோகன், பபி, புஸ்பயூலன்,வதி, சுகி, புஸ்பகாந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அந்தோனிப்பிள்ளை, மரிய கொறற்றி.

### திருமதி பொன்னம்மா யோன்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - உசன் இராமநாதன் வித்தியாலயம்)



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்பொழுது திருகோணமலையில் வசித்துவந்தவருமான திருமதி யோன்பிள்ளை பொன்னம்மா நேற்று (10/08/2009) திங்கட்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் யோசேப் யோன்பிள்ளையின் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி) அன்பு மனைவியும், திருமதி யேன் அருள்மொழி (A.I, கொழும்பு), சுசீந்திர அருள்ராஜா (பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோசேப் இம்மானுவல் (I.S.A), திருமதி அருள்ராஜா யோகசாந்தி (கூட்டுறவு பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கலிஸ்ரன், தனுஷ்யன், மரினோ, ருமேஷ்யன், தார்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.08.2009) செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணிக்கு அவரின் திருமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் St. Anthony's Church திருகோணமலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, சிவபுரி, திருகோணமலை
T.P - 026 222 4060, Mobile - 0773211975

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட நலன்புரி நிலையங்களில் உள்ள 78 வயோதிபர்கள் இன்று முதல் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஓக 11

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வந்து யாழ்.மாவட்டத்தில் வெவ்வேறு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் அறுபது (60) வயதிற்கு மேற்பட்ட 78 பேருக்கு அவர்களின் உறவினர்களுடன் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை இன்று செவ்வாய்க்கிழமையிலிருந்து விண்ணப்பித்த உறவினர்கள் பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மிடம் தங்க வைப்பதற்கு விருப்பம் தெரிவித்த விண்ணப்பதாரிகள் பொறுப்பேற்பதற்கு நலன்புரி நிலையங்களிற்கு வருகை தரும் போது, தமது ஆள் அடையாள அட்டை, தமது கிராமசேவை அலுவலரிடம் வதிவிடத்தை உறுதிப்படுத்திய கடிதம் ஆகியவற்றைக் கொண்டுவர வேண்டும். அவர்களது உறவினர்கள் தங்கியுள்ள நலன் புரி நிலையங்களிற்கு நேரடியாகச் சென்று பொறுப்பேற்குமாறும், போக்குவரத்து ஏற்பாடுகளை அவரவரே செய்து கொள்ளல் வேண்டும் எனவும், எனினும் அவ்வாறு செய்ய இயலாதவர்கள் மாவட்டச் செயலக புனர்வாழ்வுக் கிளையுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

| நலன்புரி நிலையம் கோப்பாய் | |
|---|---|
| கணபதிப்பிள்ளை நாகலிங்கம் | 1949.07.16 |
| கணபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம் | 1946.07.16 |

| நலன்புரி நிலையம் : பல்கலைக்கழக விடுதி, கைதடி | |
|---|---|
| மாணிக்கவாசகம் இரத்திணசோதி | 433310721V |
| இரட்ணசோதி இந்திராணி | 505711297V |
| தியாகு யேசுதாசன் | 423561475V |
| யேசுதாசன் கெனற்றம்மா | 488173529V |
| சுப்பன் நாகம்மா | 457862849V |
| கனகரட்ணம் மல்லிகராசா | 443510230V |
| சின்னத்தம்பி சின்னப்பிள்ளை | 4685030341V |
| ரிச்சாட் கிப்போலிராஸ் திலகேந்திரம் | 500573465V |
| திலகேந்திரம் றோபிலலிதா | 54571688V |
| டானியல் மலிலம்மா | 1950.07.21 |
| சச்சிதானந்தம் இரத்தினசிங்கம் | 40061149V |
| இரத்தினசிங்கம் சோமேஸ்வரி | 555861060V |
| ஸ்ரனிலஸ் நேசம்மா | 465861010V |
| சதாசிவம் இராமலிங்கம் | 430170210V |

| நலன்புரி நிலையம் : கைதடி சிறுவர் இல்லம் | |
|---|---|
| சங்கரப்பிள்ளை மகாலிங்கம் | 502163310V |

| நலன்புரி நிலையம் : PRI-A, கைதடி | |
|---|---|
| தேவசகாயம் மதியஸ் | 1944.08.17 |
| மகேஸ் மனோன்மணி | 1943.02.17 |
| பொன்னையா பெரியதம்பி | 501160296V |
| ஆசிர்வாதம் பிலிப் | 1948.08.19 |
| பிலிப் இராஜேஸ்வரி | 1949.03.16 |
| அமுதன் டொரீஸ் | 1949.01.13 |

| நலன்புரி நிலையம் : கொடிகாமம் GTMS | |
|---|---|
| சேகராசா பூமாதேவி | 4554126 |
| பேதுரு ஞானப்பிரகாசம் | 4729827 |
| ஞானப்பிரகாசம் ஆரோக்கியமலர் | CA 0138 |
| அந்தோனிப்பிள்ளை நீக்கிலஸ் | 1936.08. |
| நீக்கிலஸ் திரேசாமலர் | 4780822 |
| கலிங்கர் இராமச்சந்திரன் | 1950.07. |

| நலன்புரி நிலையம் : PRI-B கைதடி | |
|---|---|
| சின்னையா வேதாரனியம் | 501463728V |
| முருகேசு சிவஞானசுந்தரம் | 393322480V |
| குருசாமி குலசிங்கம் | 441315481X |
| குலசிங்கம் அன்னபூரணம் | 485873040V |

| நலன்புரி நிலையம் : மிருசுவில் RTCTMS | |
|---|---|
| செல்லப்பா மாாக்கண்டு | 452491923V |
| முருகுப்பிள்ளை நல்லதம்பி | 471193380V |
| நல்லதம்பி அரியமலர் | 478171595V |
| சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை | 470420260V |
| கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி | 505173783V |
| தம்பிஐயா செல்லத்துரை | 191310233V |
| திருச்செல்வம் செல்வேஸ்வரி | 1950.01.26 |
| ஞானியார் குணவதி | 415410972V |

| நலன்புரி நிலையம் : இராமாவில் | |
|---|---|
| நடராசா மாணிக்கம் | 327610163V |
| பொன்னுத்துரை கோபாலசாமி | 502865749V |
| தேவசிகாமணி பேபிசரோஜினி | 455494071V |
| குலசேகரம் இளையதம்பி | 470340355V |
| சின்னையா தவமணி | 326594717V |
| கணபதிப்பிள்ளை நித்தியானந்தராசா | 461833403V |
| சீனிமுத்து தெய்வானை | 356091477V |
| சத்தியமூர்த்தி ஜெகதாம்பிகை | 460621542V |
| கந்தையா மார்க்கண்டு | 458084346V |
| வைத்திலிங்கம் செல்வரட்ணம் | 65 |
| காத்தமுத்து தங்கவடிவேலு | 1938.07.08 |
| தங்கவடிவேலு புஸ்பவதி | 1948.04.30 |
| செல்லையா சபாரட்ணம் | 490391329V |
| சபாரட்ணம் நிர்மலாதேவி | 526570120V |
| ஞானப்பிரகாசம் இலியஸ் | 492790257V |
| இலியஸ் சரோஜினி | 1954.07.03 |
| நாகமுத்து பரமநாதன் | 49010176V |
| நராணி செல்வம் | 441470254V |
| இராசதுரை மதிவதனா | 473030126V |
| சுவாம்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை | 1946.03.23 |
| ஆரோக்கியம் செபஸ்ரியன் | 491382856V |
| செபஸ்ரியன் கொன்சல்ரா | 547794478V |
| கந்தசாமி ஜெயச்சந்திரமூர்த்தி | 481112249V |
| கந்தசாமி மேரி மெற்றலின் | 548071046X |
| நடராசா தனம் | 1949.03.08 |
| கணபதிப்பிள்ளை சின்னத்துரை | 421031282V |
| சின்னத்தம்பி சுப்பிரமணியம் | 45072448V |
| இராசையா செல்லத்தம்பி | 361810120V |
| கந்தையா பொன்னுத்துரை | 501300454V |
| சதாசிவம் சரஸ்வதி | 466352063X |
| தங்கவேல் சுந்தரலிங்கம் | 482313833V |
| சுந்தரலிங்கம் தவமணிதேவி | 568032632V |
| வைரவப்பிள்ளை சிவசாமி | 491652128V |
| சிவசாமி அரியமலர் | 1950.02.10 |
| சின்னப்பு அந்தோனிப்பிள்ளை | 62 |
| சிவபாதம் அரியமலர் | 1945.06.04 |
| தெய்வானை சீனிமுத்து | 356091471V |

# யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக 11

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் குறைபாடுகள் மற்றும் தேவைகள் அனைத்தும் விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகச் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த அமைச்சர் இங்குள்ள குறைபாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று கல்லூரி நிர்வாகம் சார்பில் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி பயிற்சிக் கல்லூரியின் பாடத்திட்டங்களைத் தமிழில் மேற்கொள்வதற்கு ஏற்கனவே அனுமதி பெற்றுத் தந்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கல்லூரி சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இக்கல்லூரியின் குறைபாடுகள் மற்றும் தேவைகள் அனைத்தையும் கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்குத் தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

குடாநாட்டின் சுகாதார வசதிகள் குறித்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளதாக அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)



## செயற்றிட்டங்களுக்கு விண்ணப்பங்கள்

உடுப்பிட்டி,ஓக.11

கெருடாவில் சிக்கனக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையினரால் வழங்கப்பட்டுள்ளன.

சிறிய அளவிலான செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு இந்த விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-155)

## மந்திகைப் பகுதியில் படையினர் சிரமதானம்

டெங்கு நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு மந்திகைப் பகுதியில் படையினர் சிரமதானமாக சுத்திகரிப்புப் பணிகளை கடந்த இரண்டு தினங்களாக மேற்கொண்டு வருகின்றனர்.

மந்திகையில் அமைந்துள்ள தற்காலிக மரக்கறிச் சந்தை, மீன் சந்தை ஆகிய பகுதிகளும் அதன் சுற்றாடல் பிரதேசமும் மற்றும் பருத்தித்துறை - சாவகச்சேரி வீதி, கொடிகாமம் வீதி ஆகிய பொதுமக்கள் நடமாடும் இடங்களிலேயே சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (203-236)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சாவகச்சேரியில் எரிபொருள் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக 11

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம், 'கோப் சிற்றி' என்பன நாளை புதன்கிழமை திறந்து வைக்கப்படுகின்றன. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த வைபவங்களில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (50-207)

## நெடுந்தீவுக்கு வழங்கப்பட்ட இ.போ.ச. பஸ் இதுவரை அங்கு சென்றடையவில்லை

நெடுந்தீவு,ஓக. 11

நெடுந்தீவு உள்ளூர் சேவைக்கென வழங்கப்பட்ட இ.பொ.ச பஸ் இதுவரை நெடுந்தீவுக்கு சென்றடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 தினங்களுக்கு மேலாக புதிய பஸ் இங்கு வந்து சேரும் என எதிர்பார்த்திருந்த நெடுந்தீவு மக்கள் இதனால் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இங்கு சேவையில் இருந்த பஸ் சேவைக்கு உகந்ததல்ல எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளூர் போக்குவரத்துச் சேவையும் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் புதிய பஸ் வந்து சேராததினால் பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

படகுக்கென பயணிக்க வரும் மக்கள் உரிய நேரத்தில் படகுத் துறைக்கு வரமுடியாததினால் சில சமயங்களில் படகைத் தவறவிடுவதாகவும் கூறப்படுகின்றது.

புதிய பஸ்ஸை நெடுந்தீவுக்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியான போதும் பஸ் இன்னமும் எடுத்துவரப் படாததினால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். (50-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலிகள் எச்சரிக்கை

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன்

யாழ்-நகரில்:
1.பொன்னான மேனியும்
2.பொலிவான
கூந்தலையும் தந்த
5. சகலரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது — சரியானது

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில்

போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தை தடுக்க இன்றிலிருந்து தைல பாட்டிலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ணமூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

போலிகளை களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே. பிளேன் மூடித்தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

குறிப்பு: போலிகளின் நடமாட்டம் வடமராட்சிப் பகுதியில் அதிகமாக உள்ளதால் வடமராட்சி மக்கள் இதைக் கருத்தில்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:6382) AR/PR/No.:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சந்திரச் சந்திக்கு அண்மையில்)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
கந்தன்
இராசையா

தோற்றம்
15★09★1942

மறைவு
12★07★2009

கடந்த 12.07.2009 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்து குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.08.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
T.P.: 021 5680192 (87689) குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு

மண்ணில்
20 ★ 07 ★ 1933



விண்ணில்
13 ★ 07 ★ 2009

### திருமதி செல்வமணி லூசியா லியோ
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்" (யோவான் 11-25)

கடந்த 13.07.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது தயாரின் மரணத்தின்போது துன்பத்தில் பகிர்ந்துகொண்டோருக்கும், எமக்குப் பலவிதங்களிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (12.08.2009) புதன்கிழமை முற்பகல் 11.30மணிக்குச் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (87716) குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08 ★ 09 ★ 1954





பிறப்பு
14 ★ 04 ★ 1955

சிதம்பரநாதர் காராளசிங்கம் — காராளசிங்கம் தவயோகநாயகி

இறப்பு: 11.08.2006

ஆவணி மாதம் பதினோராம் திகதி
ஆதவன் மறையும் மாலைப் பொழுதிலே
ஆவேசமாய் வந்த ஆட்லறி ஏவுகணையால்
அழிக்கப்பட்ட எம் குடும்ப விளக்குகளே!
நீங்கள் எம்மைப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனதுவோ?
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி. (சி/560192)
பிள்ளைகள் - குகன், சயந்தன், சயந்தினி, பிரதினி
மருமகன் - செந்தூரன் (கனடா).

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஓக.11

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்மொழி தினப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**பாவோதல்**

*பிரிவு 1* - மு.தர்சிகா (சுழிபுரம் வடக்கு ஆறுமுகசுவாமி வித்தியாலயம்), சு.நிலக்ஷி (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), கோ.சுதாஜினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

*பிரிவு 2* - அ.அமிர்தவர்ஜினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.சுமி (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி), த.திவாஜினி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்).

*பிரிவு 3* - ம.தயாணி (ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாட.), ம.சங்கவி (வட்டுக் கோட்டை மத்தியகல்லூரி), அ.அனுசியா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்).

*பிரிவு 4* - சி.ருகல்யா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), வி.ஸ்ரீமதங்கி (வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி), ம.துஜீபா (மாதகல் சென்.யோசெப் வித்தியாலயம்).

*பிரிவு 5* - ஈ.நசாங்கன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ச.அபிலாஷா (வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி) ந.துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**இசையும் அசைவும்**

*பிரிவு 1* - ஜெ.அனுஷியா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), சு.ஜனனி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), சி.நித்தியானந்தன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

**இசை (தனி)**

*பிரிவு 2* - இ.சயந்தன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ந.ஐங்கரன் (சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), வி.பவித்திரா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை).

*பிரிவு 3* - தி.ஜனனி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), சி.லக்சியா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), மா.பிரணவரூபன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

*பிரிவு 4* - ச.குகதர்சி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), லோ.சிந்துஜா (இணுவில் மத்திய கல்லூரி), பி.கதிஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

*பிரிவு 5* - வை.ரஞ்சினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), து.துஷ்யந்தி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), ச.சங்கீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**இசைக்குழு (திறந்த போட்டி)**

*பிரிவு 1* - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), இணுவில் மத்திய கல்லூரி), வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

*பிரிவு 2* - வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி. (203-86)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு 4லட்சத்து 50 ஆயிரம் அபராதம்

உடுப்பிட்டி, ஓக.11

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி விற்பனை செய்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

அபராதப் பணத்தினைச் செலுத்தத் தவறின் 52 மாத சிறைத் தண்டனை வழங்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது.

மேற்படி வீட்டில் பருத்தித்துறைப் பொலிசார் திடீர் சோதனையில் ஈடுபட்டபோது 115½ லீற்றர் கசிப்பும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள், 168 லீற்றர் கோடா, ஒரு மூடை சீனி, 24 பக்கற் ஈஸ்ற் போன்றவையும் கைப்பற்றப்பட்டன என்று கூறப்பட்டது.(203-155)


A/L 2009 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு IIS இன் மனமார்ந்த வாழ்த்துக்கள்

யாழ் மாவட்டத்தில் இருந்து A/L 2009 பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் இப்பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றியளித்து சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி தர வேண்டும் என , IIS உங்களை மனதார வாழ்த்துகின்றது.

"IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

IIS | IIS City Campus | IBMS


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சண்முகம்
அருளானந்தம்
(விசவர் - CTB)



தோற்றம்
26★01★1945

மறைவு
02★07★2006

திதி:11.08.2009

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம் மனம்
காலன் அவன் கவர்ந்தாலும்
காலம் எல்லாம் வாழ்ந்திடும்
எழுதி வைத்த ஓவியமாய்
எம்முடனே வாழ்ந்திடுவீர்!

அறிவாலயம்,
கரணவாய். (87720)
துயரமுறும்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 ★ 08 ★ 1937



மறைவு
24 ★ 07 ★ 2008

### திருமதி ஈஸ்வரி பரமகுரு B.Sc., Dip. in Ed.
(இளைப்பாறிய ஆசிரியர். யா/மேதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் தெய்வமே!
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (12.08.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை. (சி/560227)
என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.


கொம்ப்யூட்டர் கல்விக்கான புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்



Diploma in Computerized Accounting
Duration : 3 Months

Professional Diploma In Graphic Design
Corel Draw, Adobe Photoshop, Adobe Illustrator, Image Styler, Plugins, Photo Paint, Scanning, Project.
Duration : 4 Months

Diploma in Web Design & Development
Duration : 3 Months

Adv.Diploma in Digital Pre-Press
Duration 3 Months

Dip. in Digital Video Production (Audio & Video Editing)

டிப்ளோமா சான்றிதழ்கள் CSC-இந்திய உயர்கல்வி நிலையத்தால் வழங்கப்படும்

ASIAN - CSC COMPUTER EDUCATION

2C, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். 021-222 5677
கொடிகாமம் வீதி,நெல்லியடி. 077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
நற்சிந்தனை
"கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!"

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
11.08.2009 24 செவ்வாய்க்கிழமை
Special Guidance For A/L 2009&2010



க. பொ.த் உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும் கல்வி இணைப்பிதழ்


# விசாகா கல்லூரி, கொழும்பு .
## இறுதித் தவணைப் பரீட்சை - Final Term Test
## க.பொ.த.உயர்தரம் - ஜூலை 2009.
## பௌதிகவியல்

* * * இவ்வார இணைப்பிதழில்...
* பௌதிகவியல் (கொ/விசாகா கல்லூரி)...
* இரசாயனவியல்(கொ/விசாகா கல்லூரி, கொ/றோயல் கல்லூரி)

### பகுதி-11 A, அமைப்புக்கட்டுரை வினாக்கள்

நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

01. மெல்லியதும் ஒரே சீரானதுமான குழாய் ஒன்றின் அடிப்பகுதியில் குமிழ் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. குமிழின் அடியில் ஈயத் துண்டுள் இடப்பட்டுள்ளதுடன் கண்ணாடி குழாயின் உற்புறமாக mm அளவிடையில் அமைந்த கடதாசி அளவு சட்டம் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. $CuSO_4$இன் அடர்த்தியை துணிவதற்கு பின் வரும் நீரவமானி அமைப்பு பயன்படுகின்றது, அத்துடன் குழாயினுள் இடக்கூடிய சிறிய கிராம் நிறைபடிகளும் தரப்பட்டுள்ளன.




a) படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு திரவமானியானது $CuSO_4$ கரைசலினுள் அமிழ்ந்து மேலெழும்போது திரவமானி மீது தொழிற்படும் விசைகளைச் சரியான புள்ளிகளில் குறித்து அவற்றை பெயரிடுக.


b) மேலே (4) இல் குறிப்பிட்ட நிலையிலுள்ள திரவமானியின் மேற்பகுதியில் சிறிய அமுக்கம் ஒன்று கீழ்நோக்கி பிரயோகிக்கப்பட்டு விடுவிக்கப்படு மாயின், குறித்த திரவமானி மீண்டும் பழைய நிலையை அடையும். இதற்கான காரணத்தை விளக்குக.

c) Pb துண்டுகளை மாத்திரம் உடைய திரவமானியின் அடர்த்தி P ஆகவுள்ள போது $CuSO_4$ கரைசலினுள் மானியானது மேலெழும்பேரது கடதாசி அளவு சட்டத்தின் வாசிப்பு அல்லது ஆகும். Pb துண்டுகளுடன் கூடிய மானியின் திணிவு M ஆகும். மானியில் சமநிலைக்கான சமன்பாடு ஒன்றை எழுதுக. குமிழின் கனவளவு Vo ஆகும். சீரான குழாயின் குறுக்குவெட்டு பரப்பு A ஆகும்.

d) இப்போது மானியினுள் திணிவு m உடைய சிறிய நிறை ஒன்று போடும்போது திரவமானியின் கடதாசி அளவு சட்டத்தின் வாசிப்பு l ஆகும். இதற்கு இசைவான சமன்பாடு ஒன்றை எழுதி m,l இற்கான தொடர்பு ஒரு நேர்கோடு எனப் காட்டுக.

e) அடர்த்தி Pஇனை துணிவதற்கு உகந்த வரைபு ஒன்றை வரைவதற்கான நீர் பின்பற்றும் பரிசோதனை ரீதியான படிமுறைகளை எழுதுக.


f) e இற்கான வரைபை வரைவதற்கான ஆள்கூற்று தளம் தரப்பட்டுள்ளது. அச்சுக்களைப் பெயரிடுவதுடன் வரைபை வரைந்து அதனை x என பெயரிடுக.



g) 1. வரைபிலிருந்து P ஐத் துணியும்போது உங்களுக்கு தேவையான மேலதிக அளவீடு யாது?
   2. அவ்வளவீட்டை பெறுவதற்காக பயன்படுத்தும் அளவீட்டு உபகரணம் எது?

h) மேலே e இல் செய்த பரிசோதனையை தேங்காய் எண்ணெயைக் கொண்டு செய்யும்போது கிடைக்கும் வரைபை fஇலுள்ள ஆள்கூற்றுதளத்திலேயே வரைந்து அதனை y எனப்பெயரிடுக.

02. a) அறை வெப்பநிலையில் திரவமொன்றின் நியம அமுக்கத்தை வாய்ப்புப் பார்ப்பதற்காக கீழ்வரும் அமைப்பு உங்களுக்கு தரப்பட்டுள்ளது. செங்குத்து உயரம் h உடைய 200mm நீளமுடைய இரச நிரல், சிறிய திரவ நிரல் ஆகியவற்றால் $l$ நீளமுடைய வாயு நிரல் ஒன்று மெல்லிய சீரான குழாயினுள் அடைக்கப்பட்டுள்ளது. வளிமண்டல அமுக்கம் mm Hgயும், குழாயினுள் சிறைப்பட்டுள்ள உலர் வளியின் அமுக்கம் P mm Hg யும்,அறைவெப்ப நிலையில் நியம அமுக்கம் Ps mm Hgயும் ஆகும் எனில்,




1. π,Ps,h என்பவற்றில் வாயுவின் அமுக்கம் P இற்கான கோவை ஒன்றைப் பெறுக.
2. அதற்காக நீங்கள் பாவித்த விதியையும் கருதுகோள்களையும் தருக.

b) கனவளவிற்கு நீளமானது நேர்விகிதசமன் எனக்கொண்டு Ps இற்கான தொடர்பு ஒன்றை வாயு விதியை பயன்படுத்தி பெறுக.
(இரசத்தினது உயரம் $h_1$ வளி நிரலின் நீளம் $l_1$ உயரம் $h_2$ அதிகரிக்கும்போது நீளம் $l_2$ எனக்கொள்க)

c) நீர் ஒரு வரைபு வரைய விரும்பின் எவ்வாறான அளவீடுகளை குறிப்பிடுக.

d) போயிலின் விதியை வாய்ப்பு பார்ப்பதற்காக இப்பரிசோதனையை பயன்படுத்த முடியுமா?


e) இக்குழாயானது (1) மெல்லியதாகவும் (2) சீரானதாகவும் இருத்தல் அவசியம் ஏன் என விளக்குக.
1.
2.

f) வெப்பநிலையுடன் நிரம்பலாவி அமுக்கம் மாறுபடுவதை பின்வரும் அட்டவணை குறிப்பிடுகின்றது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0°C | 0° | 20° | 40° | 60° | 80° | 100° | 120° | 200° |
| நி.ஆ.அ (mmHg) | 5 | 10 | 50 | 160 | 385 | 760 | 920 | 1800 |

மேற்படி அட்டவணையை பயன்படுத்தி பின்வரும் கூற்றுக்களை விளக்குக.
1. நீர், ஏன் 100°C இல் கொதிக்க வேண்டும்.
2. அமுக்க அடுப்பு ஒன்றினுள் உயர் வெப்பநிலையில் நீர் கொதிக்கத் தொடங்கும்போது யாது நிகழும்?

03. வளியில் ஒலியின் வேகத்தை துணிவதற்கான பரிசோதனை அமைப்பு காட்டப்பட்டுள்ளது. குழாயில் முனைவு திருத்தம் காணப்படுகின்றது. பின்வரும் வாசிப்புக்களை ஒலியின் அதியுயர் செறிவு பெறப்பட்டது.




| நிலமை | குழாயின்நீளம் | நீர்மட்டம் |
|---|---|---|
| 1 | 65.3cm | 50.3cm |
| 2 | 95.1cm | 50.1cm |


a) நீர்மட்டத்தை அளப்பதற்கு நீச்சல் கட்டத்தையும் மூலை மட்டத்தையும் எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதைக் குறிப்பிடுக.

b) மேற்படி இரு அளவீடுகளினதும் நீர்மட்டமானது மிகசிறிய வித்தியாசத்தில் காணப்படுகிறது எவ்வாறான பௌதீக கணியம் இதனுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதற்கான காரணம்?

c) குறித்தோர் உடலினது நிலையை படம் காட்டுகிறது நீர்மட்டத்திற்கு மேல் உள்ள இழை இரு குத்துக்கள் திறந்த முனையிலும் மூடியமுனையிலும் விடப்பட்டுள்ளன. இரு புள்ளிகளுக்கும் இடையிலுள்ள பரிவு அதிர்வு நிலையை வரைந்து காட்டுக.





d) அருகில் உள்ள படத்தில் முதலாவது உயர் தொனி கேட்கும்போது அலையின் அமைப்பை வரைந்து கணு (N) முறன்கணு (A) என்பவற்றைக் குறிப்பிடுக.




e) மேற்படி வாசிப்புக்களில் இருந்து தெரியாத கணியம் ஒன்று கணிக்கமுடியாது உள்ளது.
1. இரு வாசிப்புக்களுக்கும் இடையிலான தொடர்பு யாது? தெரியாத கணியம் கணிக்க முடியாமைக்கான காரணம்?
2. உமது வாசிப்புக்களில் இருந்து கணிப்பை மேற்கொள்வதற்கு இடையூறாக உள்ள இரு வழுக்கள் யாது?

f) இசைக்கவை அதிரச் செய்தபோது இரு வித்தியாசமான ஒலிச்செறிவு உள்ள பரிவு பெறப்பட்டது. அவற்றில் ஒன்று அடிப்படை அதிர்வும், மற்றையது முதலாவது மேற்றொனியும் ஆகும். முதலாவது மேற்றொனியின் ஒலிச்செறிவு மட்டம் 10dB
1. கீழே தரப்பட்டுள்ள ஒலிச்செறிவு மட்டம் - நீளவரைபில் அடிப்படை அதிர்வுக்கும், முதலாம் மேற்றொனிக்கும் உரிய ஒலிச்செறிவு மாறிலியை வரைக.




2. அடிப்படை அலகுக்கும் முதலாவது மேற்றொனிக்கும் இடையிலுள்ள ஒலிச்செறிவு மட்டத்தின் வித்தியாசம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 15 10 1944

பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்புக்கு அணிகலனாய்
ஆசையின் இருப்பிடமாய்
பண்பிற்கோர் சிகரமாய்
கற்புக்கு ஓர் இலக்கணமாய்
வாழ்ந்து நல்வழிகாட்டிய
குலக் கொழுந்தே!
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கலங்கி நிற்க பாசமுள்ள அப்பாவிடம்
துணையாய் கூடிச் சென்றாயோ!
மண்ணுலக வாழ்வு விட்டு ஒரு மாதம்
சென்றதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனின்
பாதார விந்தங்களைப் பிரார்த்திப்போமாக.
சாந்தி!

உதிர்வு 12 07 2009

தாவளை - இயற்றாலை, மந்துவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி தில்லையம்பலம் ரத்தினேஸ்வரி

கடந்த 12.07.2009 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், அனைத்து ஒத்துழைப்புக்கள் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னையின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.08.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமனதுடன் மன்னித்து இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்.

தாவளை - இயற்றாலை,
மந்துவில், கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மகன்மார், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 27 . 02 . 1955

இறப்பு 14 . 05 . 2009

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சபாரத்தினம்
இரத்தினம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி

## திருமதி சபாநாயகி (மலர்) கணேசராசா

எப்போதும் நாமே உலகம் என எண்ணியிருந்தாய் அக்கா
இடைநடுவில் உதிர்ந்து இருள் தருவாய் என நினைக்கவில்லை
நீண்ட நாள்களாக உன்முகம் காணவில்லை
காணுவோம் என்ற நம்பிக்கையில் நாமிருந்தோம்
எமது நம்பிக்கை பொய்யாகி விட்டதே
நாள்கள் தொண்ணூறு ஆனாலும்
என்றும் நாம் உன் நினைவுகளில்....
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 14.05.2009 வியாழக்கிழமை அகாலமரணமடைந்த திருமதி சபாநாயகி (மலர்) கணேசராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.08.2009) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

203/2, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். (87672)

உன் பிரிவை மனதில் ஏற்றுக்கொள்ள முடியாமல் ஏங்கித் தவிக்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.ராதாகிருஷ்ணன் மற்றும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரி தயாநாயகி மற்றும் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், இப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி சகாயநாயகி மற்றும் புனித அந்தோனியார் கல்லூரியின் அருட்தந்தை ஏ.றொபின் சன்ஜோசப் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயக் கல் விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (325)

## தற்செயல் நிவாரணத்துக்கு காசோலைகள் வந்தன

நவாலி, ஓக 11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பின்வரும் பெயர் முகவரியுடையவர்களின் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுக்கான காசோலைகள் சமூகசேவை அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களை உடன் செயலகத்திற்கு வந்து இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.

இ.றஜிகலா (சுதுமலை தெற்கு), க.துரைராசா (டச்வீதி, மானிப்பாய்), க.சசிகரன் (முள்ளிலேன் ஆனைக்கோட்டை), நா.பத்மநாதன் (சாந்தை).

சுயதொழிலுக்கான நிவாரணம் பெறுவோர்: தே.சுமதி (பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்), ஜி.சகாயமேரி (தேவாலய வீதி ஆனைக்கோட்டை).

(203-100)

## விலங்கு விசர் நோய் ஆபத்தானது

விலங்கு விசர் நோய் பெரும்பாலும் றேபிஸ் வைரஸ் தொற்றுள்ள நாய், அரிதாக பூனை, ஓநாய், கீரி வௌவால் போன்ற விலங்குக் கடியினால் விலங்கிலிருந்து மனிதனுக்கு ஏற்படுகின்றது. இந்நோயினை முற்றாக இல்லாதொழிக்க பொதுமக்களின் பங்களிப்புடன் நோயியல் கண் காணிப்பு மிக அவசியமாகின்றது.

செப்ரெம்பர் 28 ஆம் திகதி உலக விலங்கு விசர்நோய் தினத்தினை முன்னிட்டு எமது பிரதேசத்தில் கீழ்வரும் நடவடிக்கைகள் விசேடமாக மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

★ சகல வளர்ப்பு நாய்களுக்கும் ஏ.ஆர்.வி தடை ஊசி ஏற்றுதல்.

★ கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் குறைப்பதற்கு கால்நடை வைத்தியர்களின் அனுசரணையுடன் இலவசமாக ஆண், பெண் நாய்களுக்குக்கான இலவச கருத்தடை சிகிச்சை நடத்துதல்.

★ வளர்ப்புப் பெண் நாய்களுக்கு இலவசக் கருத்தடை ஊசி போடுதல்

★ சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் சுகாதாரக் கல்வி மூலம் நடத்தை மாற்றம் ஏற்படுத்துதல்.

★ பாடசாலை மாணவர்களிடையே இந்நோய் சம்மந்தமான கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, கண்காட்சி என்பன நடத்துதல்.

**நாய் வளர்ப்போரின் கவனத்துக்கு**

★ நாய் வளர்ப்போர் வளர்ப்பு நாய்களை உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்து தெருவில் நடமாடவிடாது வீட்டு வளவினுள் கட்டிவைத்து அல்லது கூட்டினுள் அடைத்து வளர்க்க வேண்டும்.

★ தேவையற்று நாய்கள் பெருகி பொது இடங்களில் குட்டிகளை அலையவிடாது இலவச கருத்தடை சிகிச்சையினை மேற்கொள்ளவும்.

★ பொது இடங்களில் எஞ்சிய உணவுப் பொருள்களை வீசாது பாதுகாப்பாக அப்புறப்படுத்துங்கள்.

★நாயினால் கடியுண்டால் உடனடியாக ஓடும் நீரில் சவர்க்காரமிட்டுக் கழுவிய பின்னர் வைத்தியசாலைக்குச் செல்லும் போது கடிக்கப்பட்ட நாயின் ARV Card இனை எடுத்துச் செல்லவும்.

★ தங்கள் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ARV தடுப்பு மருந்து ஊசி போடும் போது சென்ற ஆண்டு ஊசி போடப்பட்ட அட்டையையும் எடுத்துச் செல்லவும்.

2012 ஆம் ஆண்டளவில் விலங்கு விசர் நோயற்ற
யாழ்.குடாநாட்டினை உருவாக்குவோம்.

**டாக்டர் ஆ. கேதீஸ்வரன்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## வடமாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக மாதாந்தம் 5.5 மில்லியன் ரூபா பொதுசன உதவியாகச் செலவு

### வடமாகாண சமூக சேவை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஓக11

வடமாகாணத்தில் உள்ள 33 பிரதேச செயலகங்களுக்கு ஊடாக பொதுசன மாதாந்த உதவித் தொகைக்கு மாதாந்தம் 5.5 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

பொதுசன மாதாந்த உதவித் தொகையை எதிர்வரும் ஆண்டுகளில் அதிகரிப்பதற்கு எமது வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சு செயலாளர் தி.இராசநாயகம் திட்ட முன்மொழிவுகளை மத்திய அரசுக்கு முன்மொழியவுள்ளார் என்று வடக்கு மாகாண தலைமைப் பீட சமூகசேவை அதிகாரி நாகராஜா இராஜமனோகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

எமது சேவைத்திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்து வாழ்ந்துவரும் நோயாளிகளுக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் (புற்றுநோய், சுலசீமியா, தொழுநோய், கயரோகம்) சமூகசேவை அதிகாரிகளுக்கு ஊடாக கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றோம்.

இக்கொடுப்பனவு நிரந்தரமாகவின்றி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஊக்குவிப்பு நிதி ஆகும்.

அத்துடன் சிறிய பாதிப்புக்குள்ளான தற்செயல் நிவாரணமும் வழங்கப்படுகின்றது.

இதற்கான கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபாவரை பெற்றுக்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்டவர்கள் கிராம அலுவலர், சமூகசேவை அலுவலர் ஊடாக பிரதேச செயலரின் ஒப்புதல்களுடன் இந்நிதி பெற வாய்ப்பு உண்டு.

33 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூக பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இவ் அமைப்பின் ஊடாக மக்கள் பாரிய பலன்களைப் பெறக் கூடியதாக வழியமைக்கப்பட்டு வருகின்றது-என்றார்.

(203-302)

## கந்தரனுபூதி மனனம் செய்வோருக்கு திருக்கோவையார் இலவசம்

சுழிபுரம், ஓக 11

சுழிபுரம் - பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய சங்காபிஷேக சபையார் கந்தரனுபூதி ஐம்பத்தொரு பாடல்களையும் மனனம் செய்பவர்களுக்கு மாணிக்க சுவாமிகள் அருளிய திருக்கோவையார் நூலை இலவசமாக வழங்கவுள்ளனர்.

பாடல்களை மனனம் செய்தவர் வாரம் தோறும் நடைபெறும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனையில் பங்கு கொண்டு பாடல்களை பஜனைச் சபை யாரிடம் ஒப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(203-28)

## ஸ்கந்தவரோதய ம.வியில் வகுப்பறைக் கட்டடம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக11

சிலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியில் வகுப்பறைக் கட்டடம் அமைக்கவுள்ளனர்.

கட்டடத்திற்கான கால்கோள் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

(203-207)

## கந்தரலங்காரம் பாடல்கள் இலவசமாக விநியோகம்

சுழிபுரம், ஓக 11

நல்லூர் முருகன் ஆலய மகோற்சவ நாள்களில் அருணகிரிசுவாமிகள் அருளிய கந்தரலங்காரப் பாடல்கள் 107 வாரியார் சுவாமிகள் எழுதிய பொருளுடன் இலவசமாக வழங்கி வருகின்றனர்.

தபாலில் நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 15 ரூபா பெறுமதியான முத்திரையை கவருடன் 'செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம்' என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். (203-28)

## மாகாண மட்டக் கணித, விஞ்ஞானப் போட்டி; தென்மராட்சி வலயத்தில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஓக11

மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**கணிதம்**

*தரம்-6:* ரவிக்குமார் விகானி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சிவசுப்பிரமணியம் இளங்குமரன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நிமலன் பவித்ரா-மட்டுவில் ம.வி.

*தரம்-7:* பரமேஸ்வரன் சுதர்சன்-மட்டுவில் கமலாசனி வித்தி., சபாநாயகம் வானதி-சாவகச்சேரி இந்து, செல்வராசா சாரங்கன்-சாவகச்சேரி இந்து.

*தரம்-8:* ஆனந்தகுமார் கிருஷாந்த்-சாவகச்சேரி இந்து, சிவகுமாரன் வின்சன்-சாவகச்சேரி இந்து, பாலதேவா ஆதவன்-மீசாலை வீரசிங்கம்ம.வி, சங்கரப்பிள்ளை லக்ஸிதன்-கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

*தரம்-9:* தவராசா செந்தாளன்-சாவகச்சேரி இந்து, மோகனதாஸ் தனுஷ்ராஜ்-மீசாலை வீரசிங்கம் ம.வி., கதிர்காமநாதன் நிறஞ்சன்-சாவகச்சேரி இந்து.

*தரம்-10:* தர்மராசா தர்சிகன்-சாவகச்சேரி இந்து, தங்கவடிவேல் சிவதாஸ்-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கிருஷ்துதாஸன் கிறிஸ்ரிகா வேளாயினி- உசன் இராமநாதன் ம.வி., இராசேந்திரம் கிருஷிகா-சாவகச்சேரி இந்து.,

*தரம்-11:* பரஞ்சோதி சாகித்தியன்-சாவகச்சேரி இந்து, அருளானந்தம் விமலினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, சந்திரஜெயம்.ரஜிதா-மீசாலை வீரசிங்கம் ம.வி., செல்வரத்தினம் லக்ஸ்மியா-சாவகச்சேரி இந்து, இராசரவீந்திரன் சௌமியா-சாவகச்சேரி.

**விஞ்ஞானம்**

*தரம்-6:* ஜனந்தன் சிவன் அன்பு-சாவகச்சேரி இந்து, ரவிக்குமார் விகானி-சாவகச்சேரி இந்து, பிரபாகரன் மதுஷா-சாவகச்சேரி மகளிர்.

*தரம்-7:* செல்வ[illegible]கம் சுபனேத்ரா-கொடிகாமம் அ.[illegible]சாலை, திலீப்குமார் சௌந்தரராஜ[illegible]சாய் அ.த.க.பாடசாலை, பேரின்பநாதன் தர்சன்-சாவகச்சேரி இந்து.

*தரம்-8:* சதீஸ் வசந்தன்-கச்சாய் அ.த.க.பாடசாலை, இராசையா சங்கமி- உசன் இராமநாதன் ம.வி., சூரியகுமார் லக்ஸி-சாவகச்சேரி மகளிர்.

*தரம்-9:* பஞ்சாயுதன் சுவிதா-கச்சாய் அ.த.க.பாடசாலை, மார்க்கண்டு சேனுஜா-உசன் இராமநாதன் ம.வி., ஏ.கார்த்திகா-வரணி ம.வி.

*தரம்-10:* பரமநாதன் பிரதீபா-சாவகச்சேரி இந்து, கிறிஸ்துதாஸன் கிறிஸ்ரிகா வேளாயினி-உசன் இராமநாதன் ம.வி., அன்னலிங்கம் கீதிகா-மீசாலை வீரசிங்கம் ம.வி.

*தரம்-11:* ஜெயவீரசிங்கம் கோபிகா-மீசாலை வீரசிங்கம் ம.வி., கஜீபன் நல்லதம்பி-சாவகச்சேரி இந்து, குணசேகரம் சரண்யா-சாவகச்சேரி இந்து. (203-207)






யாழ்.மலரும் பூக்கள் அபிருத்திச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த புதன்கிழமை குருநகர் சென்.ஜேம்ஸ் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

விருந்தினர்கள் [illegible] அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் [illegible] போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளைவழங்குவதையும்படத்தில் காணலாம். (224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. a) அருகே உள்ள படமானது m பாலமும் மீற்றர் பாலமாகும். பரிசோதனைகளில் வழக்கு காவியானது மீற்றர்பால கம்பியில் கட்டாயம் தொழிற்படல் வேண்டும். மிகத்திருத்தமான வாசிப்புக்கள் பெறப்படுவதற்கு தடைகள் $R_1$, $R_2$ தெரிவு செய்யப்படுதல் அவசியமாகும். இவ்வாறு தெரிவு செய்யப்படும்போது சாவி தொடப்படும் புள்ளிகளில் தங்கியுள்ளது. ABC எனும் புள்ளிகளுள் $R_1$, $R_2$ திணிவதற்கு பொருத்தமானவை எவை? காரணம் தருக.





b) மேற்படி பரிசோதனை, கம்பி ஒன்றின் தற்தடை துணிய வேண்டி உள்ளது. இதற்காக $l$ நீளமுடைய கம்பி இடது பக்க இடைவெளியின் இணைக்கப்பட்ட தடை R தரப்பட்டுள்ளது. சமநிலை நீளம் L இடது கைபக்கத்தில் இருந்து காணப்பட்டது. கம்பியினது குறுக்கு பரப்பு - A, கம்பியினது தற்தடை -$\rho$ எனின் $l$ இற்கான கோவை ஒன்றை $\rho$, L, R, A ஆகியவற்றின் சார்பில் தருக.

c) இப்பரிசோதனை தடை R ஒரு மாறிலியாகும் கம்பியின் நீளம் $l$ மாற்றப்படக் கூடியது. L சமநிலை நீளம் அளவிடப்பட முடியும் எனின், Y = mm எனும் வரைபு வரைவதற்கு மேற்படி சமன்பாட்டை மீள ஒழுங்குபடுத்துக.

d) பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வரைபு வரைக.

| சாரா மாறி (cm) | சார்ந்த மாறி |
|---|---|
| 30 | 0.27 |
| 40 | 0.37 |
| 50 | 0.46 |
| 60 | 0.56 |
| 70 | 0.61 |
| 80 | 0.74 |
| 90 | 0.84 |
| 100 | 0.93 |




e) வரைபின் படித்திறன் காண்க.

f) $R = 8\Omega A = 0.2mm$ எனின், தற்தடையைக் காண்க.

g) செப்பானது மிககுறைந்த தடையை உடையது. மேற்படி பரிசோதனைக்கு செப்புக்கம்பி உபயோகிக்கப்படும்போது திருத்தமான பெறுமானம் பெறப் பட்டது ஏன் என விளக்குக.

## பகுதி-11 B, கட்டுரை வினாக்கள்

01. ஒரு சுழல் பந்து வீச்சாளர் 5m தூரத்தில் இருந்து ஓடிவந்த $12ms^{-1}$ வேகத்துடன் பந்தை வீசுகிறார். பந்து வீச்சாளரின் திணிவு 60kg பந்தினது திணிவு 100kg.



1) பந்து வீச்சாளரது புவியீர்ப்பு மையத்தினூடாக தொழிற்படும் விசையைக் காண்க.
2) படம் ஒன்றில் காட்டியவாறு பந்து வீச்சாளன் நிலைக்குத்தாக பந்தை வீசுகிறார். பந்திலும் அவரது உள்ளங்கையில் தொழிற்படும் விசைகள் யாது?

பந்து வீச்சாளர் ஓடும்போது படம் 11 காட்டியவாறு அவரது முழங்கை செங்குத்தாக மடிக்கப்பட்டு முழங்கையின் ஊடான அச்சுப்பற்றி அசையக்கூடியவாறு பந்து வீசப்படுகிறது அப்போது பந்தில் உள்ள கோண ஆர்முடுகல் $20rads^{-2}$ கையிலுள்ள தசை நார்கள் விசை ஒன்றை பந்தின் மீது பிறப்பிக்கின்றன. நிலையான எலும்பில் இருந்து 5cm தூரத்தில் மூட்டு காணப்படுகிறது. முழங்கையினது புவியீர்ப்பு மையத்தில் இருந்து 30cm தூரத்தில் அதாவது, கையில் காணப்படுகின்றது.

3) முழங்கையினூடாக அச்சுக்கு செங்குத்தாக சடத்துவ திருப்பத்தைக் காண்க.
4) மேலே உள்ள கோண ஆர்முடுகலுடன் பந்து வீசுவதற்கு தேவையான கோண உந்தம் யாது?
5) கையிலுள்ள தசை நார்களில் தொழிற்படும் விசை (f) காண்க.
6) கை திரும்பும்போது திருப்பப்பட்ட கையில் தொழிற்படும் விசை (f) ஐக் காண்க.

பந்து விடுவிக்கப்பட்ட பின்னர் துடுப்பாட்ட வீரரை நோக்கியும் களத்தின் வழியே பந்து செல்கின்றது. படம் 111 காட்டியவாறு பந்தினது பாதை காணப்படுகிறது. பந்தினது ஒரு பக்கம் கரடாகவும், மற்றையது ஒப்பமாகவும் உள்ளன எனக் கொள்க.

7) பந்தினது படத்தை உமது விடைத்தாளில் பிரதிசெய்து பந்தில் தொழிற்படும் பாயி விசையினது இயக்கத்திற்கான திசைகளை குறித்துக் காட்டுக. பந்து துடுப்பினது அடியை அடிக்கிறது. துடுப்பு $60^0$ கோணத்தில் படத்தில் காட்டியவாறு துடுப்பினால் அடிக்கப்படுகிறது. துடுப்பின் அடியினது உயரம் நிலமட்டத்தில் இருந்து 1m ஆடும் பந்து அடிக்கப்பட்ட உடனே பந்தினது வேகம் 64.8km/h. அத்துடன் நிலைக்குத்துடன் $30^0$ கோணத்தில் துடுப்பில் இருந்து வெளியேறுகிறது. துடுப்பில் 54km/h எனும் வேகத்துடன் எறியப்பட்ட பந்து மோதுகிறது. வெளியேறும்போது பந்து துடுப்பினது மேற்பரப்புடன் $45^0$ கோணத்தில் வெளியேறுகிறது.
8) துடுப்பிற்கு செங்குத்தாக உந்த மாற்றத்தைக் காண்க.
09) பந்து மோத முன்னரும் மோதிய பின்னரும் இயக்கசக்தி?
10) இவ்வியக்க சக்தி வேறுபடுவதற்கான காரணம்?
11) தற்போது களத்தடுப்பாளர் ஒரே நேர்கோட்டில் ஓடி அப்பந்தை பிடிக்கிறார். அத்துடன் மாறா ஆர்முடுகலுடன் 5m தூரத்தில் களத்திலிருந்து பந்தைப் பிடிக்கிறார். களத்தடுப்பாளரது வேகம் யாது? (அதாவது களத்தின் முனையை அடையும்போது அவரது விரலுக்கும் காலிற்கும் இடைப்பட்ட தூரம் 2.6m ஆகும்)

02. 1) அவதிக்கோணம் முழவுட்தெறிப்பு எனும் பதங்களை விளக்குக.
2) முழவுட்தெறிப்பு நடைபெறுவதற்கான நிபந்தனைகளைத் தருக.
3) படத்தில் காட்டியவாறு கண்ணாடி குற்றி ஒன்றின் மேல் நீர் உள்ளது நீரின் உயரம் 8cm கண்ணாடி குற்றிலிலியிருந்தாலும், கண்ணாடி குற்றியினுள் படத்தில் காட்டியவாறு 9cm உயரமுடைய x, y எனும் பொருள் ஒன்று கண்ணாடி குற்றியின் மேற்பரப்பில் இருந்து 27cm ஆழத்தில் காணப்படுகிறது. வெளியில் இருந்து பார்க்கும் ஒருவருக்கு x எனும் பொருள் தோன்றும் நீளம் யாது?
4) புள்ளி பொருள் ஒன்று xஇன் மீது வைக்கப்பட்டு வளியிலிருந்து பார்க்கும் போது தெரியும் ஒளிவட்டத்தினது ஆரையை காண்க. இவ்வாறு ஆரை r உடைய ஒளிவட்டம் தோன்றுவதற்கான காரணம்?
5) A, B, C, D ஒரு வெற்றி பாத்திரமாகும் A யிலிருந்து நோக்குபவர் புள்ளி D ஐ அவதானிக்கிறார். C, D பாத்திரத்தின் நிலைக்குத்து ஓரமாகும். தற்போது சிறிய பொருளொன்று (P) 10cm தூரத்தில் வைக்கப்பட்டு அப்பொருளை பார்ப்பதற்காக பாத்திரத்தில் நீரை ஊற்றுகிறார் எனின், ஊற்றப்பட்ட நீரின் உயரம்?
6) தற்போது பாத்திரத்தில் நீருக்கு பதிலாக குறிப்பிட்ட திரவம் ஒன்று முற்றாக நிரப்பப்படுகிறது. பார்வையாளர் தனது நிலையை மாற்றாது பாத்திரத்தின் அடியின் மத்தியில் உள்ள புள்ளியை பார்க்க வேண்டுமாயின் ஊற்றப்பட்ட திரவத்தின் முறிவு சுட்டியை காண்க.

-நிறைவுற்றது-


## றோயல் கல்லூரி, கொழும்பு - 07
## முன்னோடிப் பரீட்சை - Pilot Examination
## க.பொ.த.உயர்தரம் - ஜூன் 2009.
## இரசாயனவியல் 08.08.2009 இன் தொடர்ச்சி

20. $25^0C$ இல் $BaI_2$, $BaSO_4$, $Ba_3(PO_4)_2$ என்பவற்றைப் பயன்படுத்தி முறையே A,B,C எனும் நிரம்பிய கரைசல்கள் தயாரிக்கப்பட்டன. கரைதிறன் பெருக்கமும், கரைசலின் கனவளவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.


| உப்புக்கரைசல் | உப்பின் $K_{SP}$ | கனவளவு/ $cm^3$ |
|---|---|---|
| A ($BaI_2$) | $4.0 \times 10^{15}\ mol^3\ dm^{-9}$ | 500 |
| B ($BaSO_4$) | $4.0 \times 10^{10}\ mol^2\ dm^{-6}$ | 200 |
| C ($Ba_3(PO_4)_2$ | $1.08 \times 10^{-18}\ mol^5\ dm^{-15}$ | 100 |

கரைசல்களில் காணப்படும் $Ba^{2+}$ அயன்களின் அளவின் ஏறுவரிசை,
1) A, B, C 2) C, B, A 3) B, A, C 4) B, C, A 5) C, A, B

21. பின்வரும் தாக்கத்திட்டத்தில் nitrobenzene ஆனது இறுதி விளைவு Aஆக மாற்றப் பட்டுள்ளது.




A ஆக இருக்கக்கூடியது,




22. பிணைப்புகள் உருவாகுவது சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் தவறானது,
1) மின்னேரான இரண்டு மூலங்களுக்கு இடையில் உலோகப்பிணைப்பு ஒன்று உருவாக முடியும்.
2) மின்னெதிரான இரு மூலங்களுக்கு இடையில் பங்கீட்டு வலுப்பிணைப்பு ஒன்று உருவாக முடியும்.
3) மின்னேரான மூலகமொன்றிற்கும் மின்னெதிரான மூலகமொன்றிற்கும் இடையில் அயன் பிணைப்புகள் உருவாக முடியும்.
4) பிணைப்பு உருவாக்கத்தில் எப்பொழுதும் ஆகவும் வெளியே உள்ள புற ஓட்டில் காணப்படும் இலத்திரன்கள் பங்குபற்றும்.
5) மின்னேரான மூலகம் இல்லாத போதிலும் அயன் பிணைப்பு உருவாக முடியும்.

23. $CH_3COCH_3 \longrightarrow CH(OCOCH_3)(CH_3) - CH_2 - CH(OCOCH_3) - CH_3$

பின்வரும் தாக்கத்திட்டங்களில் மேலே குறிப்பிட்ட மாற்றீட்டை கொண்டு செல்வதற்கு மிகவும் பொருத்தமானது,

1) $\xrightarrow[(ii)\ H_2O]{(i)\ CH_3MgBr} \xrightarrow{dil\ H_2SO_4} \xrightarrow{CH_3COOH}$
2) $\xrightarrow[\Delta]{NaOH(aq)} \xrightarrow{dil\ H_2SO_4} \xrightarrow{CH_3COOH}$
3) $\xrightarrow[(ii)\ H_2O]{(i)\ LiAlH_4} \xrightarrow[day\ ether]{PBr_3} \xrightarrow{Mg} \xrightarrow{CH_3COOH_3} \xrightarrow{CH_3COOH}$
4) $\xrightarrow{NaOH(aq)} \xrightarrow[(ii)\ H_2O]{(i)\ LiAlH_4} \xrightarrow{CH_3COCl}$
5) $\xrightarrow[(ii)\ HCl]{(i)\ NaCN} \xrightarrow{dilH_2SO_4} \xrightarrow[(ii)\ H_2O]{(1)\ LiAlH_4} \xrightarrow{CH_3COOH} \xrightarrow{CH_3CH_2OH}$

24. 400K வெப்பநிலையிலும் $1.0 \times 10^5\ Nm^{-2}$ அமுக்கத்திலும் $H_2$ உம், He உம் கொண்ட வாயுக்கலவையில் கனவளவு ரீதியில் 25% $H_2$ காணப்படுகிறது. 400K இல் இவ் வாயுக்கலவையின் $25m^3$ ஆனது $5m^3$இற்கு அமுக்கப்படுகிறது. இவ்வாறு அமுக்கப் பட்ட வாயுக்கலவையில் He வாயுவின் பகுதி அமுக்கம் $Nm^{-2}$ இல்,
1) $1.25\times10^5$ 2) $3.75\times10^5$ 3) $1.0\times10^5$ 4) $2.5\times10^5$ 5) $5.0\times10^5$

25. $0.15moldm^{-3}$ $Ba(OH)_2$ கரைசலின் $10.0cm^3$ உடன் $40.0cm^3$ HCl கரைசல் ஒன்று ஒருமிக்கக் கலக்கப்பட்டது. விளைவுக்கரைசலின் pH=1 ஆகும். இக்கரைசலில் காணப் படும் HCl இன் செறிவு $moldm^{-3}$ இல்,
1) 0.02 2) 0.025 3) 0.05 4) 0.2 5) 0.25

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத அடையாளங்களை வெளிப்படுத்தும் கட்சிகளைத் தடை செய்வதற்கு அரசு திட்டம்

கொழும்பு, ஓக.11

இன, மத அடையாளங்களை வெளிப்படுத்தும் கட்சிகளை தடை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது - என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான கட்சிகளை தடை செய்யும் விசேட சட்டமூலமொன்று இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படு கிறது.

புதிய சட்டங்களை பின்பற்றாத கட்சிகளை தடை செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு முதல் தடவையாக வழங்கப்படவுள்ளது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இன மற்றும் சமய அடையாளங் களைக் கொண்டு இயங்கி வரும் அரசியல் கட்சிகள் ஒரு வருட காலத்திற்குள் மீள் விண்ணப்பம் செய்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டுள் ளார்.

மேலும், செயற்படாத அரசியல் கட்சிகளை தடை செய்யவும் புதிய சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் மொத்தமாக 60 அரசியல் கட்சிகள் இருக்கின்ற போதிலும் அவற்றில் 20 கட்சிகள் மட்டுமே செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

அரசியலில் பெண்களுக்கு போதுமான ளவு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிகளின் கணக்கு விவரங்கள் மும்மொழிப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## கடற்படையிலிருந்து தப்பியோருக்கும் மன்னிப்பு

கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற படையினருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள் ளது.

கடந்த மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கடற்படையிலிருந்து உத்தியோகப் பற்றற்ற ரீதியில் விலகிச் சென்ற அல்லது தப்பியோடியவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

கடற்படையிலிருந்து தப்பியோடியவர்கள் கௌரவமான முறையில் பதவி விலகுவதற்குத் தேவையான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இன்று முதல் எவ்வித தடைகளும் இன்றி கடற்படையிலிருந்து தப்பியோடியவர்கள் தங்களது பதவியை இராஜினாமா செய்ய முடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (சி)

# தென் மாகாணசபைக்கான வேட்பு மனுக்களை வரும் 21ஆம் திகதி முதல் சமர்ப்பிக்க முடியும்

**தேர்தல் செயலகம் அறிவிப்பு**

கொழும்பு, ஓக. 11

தென் மாகாணசபைக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் சமர்ப்பிக்க முடியும் - என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் தேர்தல் செயலகம் இதனை அறிவித்துள்ளது.

காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தென் மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி நண்பகல் வரையில் தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் காலம் நிறைவடைந்ததன் பின்னர் தேர்தல் தினம் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# ஈரானிய ஜனாதிபதிக்கு மஹிந்த தொலைபேசி மூலம் வாழ்த்து

கொழும்பு, ஓக.11

அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றியீட்டிய ஈரானிய ஜனாதிபதி முகமட் அகமட் நிஜாடினுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை குறித்து தாம் மகிழ்ச்சி அடைகிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த உறவுகளை மேலம் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பிலும் இந்தத் தொலைபேசி உரையாடலின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவிக்கிறார் என முஹமட் அகமட் நிஜாடீன் தெரிவித்துள்ளார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.11

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் "இந்து சமய வாழ்வியல்" எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும் வண்ணை, சங்கானை நிற்சாமம், அச்செழு ஆகிய அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (9)

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவருகிறது. இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு குணராசா நக்கீரனின் பாட்டு இடம்பெறவுள்ளது. வயலின்- அ.ஜெயராம், மிருதங்கம்- பி.சியாம் கிருஷ்ணா, முகர்சிங் - என்.சதீஸ்குமார், கடம்- கு.செந்தூரன், தபேலா- சதா வேல்மாறன்.

* * *

நல்லூர் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத் தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "கம்பராமாயணம்" தொடர் சொற் பொழிவை நிகழ்த்தி வருகிறார்.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு "கங்கைவேடன்" என்னும் தலைப்பில் இசைச்சொற் பொழிவு இடம் பெறும். (9)




# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## அழகுக்கு ஒரு கந்தன்

அழகுக்கு ஒரு கந்தன் நல்லூரில் என்பார்
அன்புக்கு அடிமையவன் அடியார்க்கு எளியன்
செம்பருத்திப் பூவினில் ஒளிரும் அலங்காரம்
செஞ்சுடராய் அருள் சுரக்கும் ஒளியே உன் கோலம்
மணிநேரம் பிசகாமல் கிரியைகள் ஆற்றி
மானிடர்க்கே மங்கலங்கள் நிறையத் தருவாய்
ஒரு ரூபாய் அர்ச்சனையில் திருவுள்ளம் குளிர்வாய்
ஒப்பற்ற கருணையை ஏழைக்கும் ஈந்திடுவாய்
எண்ணற்ற பக்த கோடி ஏக்கங்கள் தீர்த்திடுவாய்
உன்னடி பணிபவர்கள் வேண்டும் வரம் தந்திடுவாய்.

திருமதி மனோன்மணி குலசிங்கம்
*கோண்டாவில்.*

## எல்லாம் உன்தன் செயலே

நேர்த்தி ஆயிரம் வைத்தோம்
நேர்ந்தது ஒன்றும் இல்லை
பார்த்தி ருந்த நீயும்
பாரா திருக்க லாமோ
தீர்த்து வைப்ப துன்தன்
செயல்தான் முருகா இல்லையேல்
நேர்ந்த துன்பம் எல்லாம்
நீங்கி டாமல் மாய்வோம்

வ.யோகானந்தசிவம்.

## நல்லை நகர்க் கந்தவேளே! உன் பதம் போற்றி

*அன்பெனும் ஊற்றிலே விளைந்திடுவாய்*
*ஆறுமுகம் காட்டி அணைத்திடுவாய்*
*இன்னல்களை இனிதே நீக்கிடுவாய்*
*ஈசனுக்கே பாடங்கள் புகட்டிடுவாய்*
*உலகுக்கோர் நீதியை உரைத்திடுவாய்*
*ஊர்மகிழ வீதிவலம் வந்திடுவாய்*
*எமனுக்கே காலனாய் மாறிடுவாய்*
*ஏறுமயில் ஏறி விளையாடிடுவாய்*
*ஐம்புலங்களையும் அடக்க அருள் புரிவாய்*
*ஒளி விளக்காய் உலகிற்கு ஜோதியாவாய்*
*ஓடி வரும் அடியவர்தம் குறை தீர்த்திடுவாய்*
*ஔடதமாகி அடியவரின் பிணி களைவாய்*

சி.சிவப்பிரஷாந்
*யாழ்.இந்துக் கல்லூரி.*

## சொல்லும் தமிழால் உனைத் துதிக்கின்றோம்

தொல்லை அகற்றி நம் துயரனைத்தும் களைந்திடுவான்
எல்லை இல்லா இன்பம் ஈந்திடுவான் - கந்தனென்று
சொல்லித் துதிப்போர்க்கு சுகமனைத்தும் கிட்டிடும்காண்
நல்லைப் பதி நாயகனை நாடித் துதி மனமே
அல்லும் பகலும் அடியவர்கள் கூட்டமது
நல்லூர் வந்துன்னை நாடித் தொழுகின்றார் - கந்தா நீ
கல்லென்று இருந்திடாதே கடைக் கண் பார்த் தருளிடுவாய்
சொல்லும் தமிழாலுனை துதித்து மகிழ்ந்திடுவோம்.

பூ.நகுலன்
*நெல்லியடி.*

## "மயில் ஏறி வந்து இரட்சிப்பாயே"

*சூர்மார்பும் குன்றும் ஒன்றாகத் துளையிட்ட உன்*
*கூர்வேலுக்காகாதோ*
*கொடுமைமிகு கொலை கொள்ளையிவை ,*
*கூண்டோடு தொலைக்க*
*யார்மேலும் குறையில்லை நாம் செய்தவினைப்*
*பயனன்றோ*
*தேரோடும் வீதியிலே தெண்டனிட்டுப்*
*புரள்கிறோம்*
*கார்மேவும் களனிகளில் கரும்பினொடு கதலியினம்*
*நனிந்து பாயும்*
*நீர்மேவும் நல்லை நகர் நின்றுலவும்*
*செவ்வேளே!*
*பார்மேலோர் நாடின்றி, ஊரின்றி, வீடுமின்றி*
*அகதியானோம்*
*பார்த்திருக்கலாகுமோ பச்சை மயில் ஏறிவந்து*
*இரட்சிப்பாயே*

திருமதி த.சபாநாதன்
*நயினாதீவு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டெடுத்த தாலிக்கொடியை ஒப்படைத்த மாணவிக்கு பொலிஸார் பாராட்டு

கெருடாவில், ஒக.11

பாடசாலை வளவினுள் கண்டெடுத்த தாலிக்கொடியைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த மாணவியைப் பொலிசார் பூராட்டியுள்ளனர்.

தம்பர்மலை மகாவித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி பயிலும் மாணவியான துரைராசா பகீரதி என்பவரே இவ்வாறு பாராட்டுப் பெற்றவராவார்.

இவர் பாடசாலை வளவினைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது நிலத்தில் கிடந்த தாலிக்கொடியைக் கண்டெடுத்து அதிபரிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் அதிபர் ஊடாக வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்தில் குறித்த தாலிக்கொடி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாணவியின் முன்மாதிரி நடவடிக்கையைப் பாராட்டிய பொலிஸார் இதுபோன்று ஏனைய மாணவர்களும் தாம் கண்டெடுக்கும் பொருள்களை உரிய இடங்களில் ஒப்படைக்கும் பண்பினை வளர்க்கவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் தாலிக்கொடியைத் தவற விட்டவர்கள் உரிய ஆதாரத்தைக் காட்டி வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(04-253)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




திரு.திருமதி
கலையழகன் - மாலினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**யதீசன்** தனது முதலாவது
பிறந்தநாளை இன்று (11.08.2009)
செவ்வாய்க்கிழமை இல்லத்தில்
கொண்டாடுகின்றார். இவரை
பெற்றோர், அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா, தாத்தா,
மாமா, மாமி, அத்தைமார்,
மாமன்மார் பல்லாண்டு
வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.

**வை.கிருஷ்ணபிள்ளை**
(வேலுப்பிள்ளை)
(அப்பப்பா).
23, காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(87724)

## சேவைநலன் பாராட்டு



அகவை அறுபது
நிறைவுபெற்று 11.08.2009இல்
ஓய்வுபெறும்
யா/சாவகச்சேரி மகளிர்
கல்லூரி பிரதி அதிபர்
**திருமதி ருக்மணிதேவி**
**இராஜரத்தினம்**
(Sp.trd General, SLTS-I)
அவர்களின் சேவைநலன் பாராட்டு

முப்பத்தெட்டாண்டுகள் முத்தான சேவையிலே,
இருபத்தெட்டாண்டுகள் யா/சாவகச்சேரி மகளிருக்காய்,
இருபதாண்டுகள் தம் சேவையில் ஆசிரியராய் அறிவூட்டி,
எட்டாண்டுகள் பிரதி அதிபராய் உவகையுடன் அரும்பணியாற்றி
அயராது பாடுபட்டு ஓய்வுபெறும்

**திருமதி ருக்மணிதேவி இராஜரத்தினம்**
அவர்கள் செம்மையான சேவையை நிறைவு செய்யும்
இந்நன்நாளில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
**வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!!**
சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(87718)

## இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் ஆண்டு நிறைவு விழா

நவாலி,ஒக.11

இலங்கை வங்கி மானிப்பாய் மேற்றரக் கிளையின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 3ஆம் திகதி முகாமையாளர் க. இலட்சுமணசர்மாதலைமையில் வங்கி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு ஆசியுரையை சுங்குவேலி சிவஞானப் பிள்ளையார் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ வா. பாலசுப்பிரமணியக் குருக்களும், மானிப்பாய் அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு அ.அன்ரனிப்பிள்ளை அடிகளும் வழங்கினார்கள்.

அன்றைய தினம் 5ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்புச் செய்த 10 பேருக்கு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(50-100)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சுவிற்சர்லாந்தில் வசிக்கும் **நாதன் - கஜேந்தினி** தம்பதியரின் செல்வப்புதல்வி செல்வி **அக்ஷயா** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (11.08.2009) செவ்வாய்க்கிழமை சுவிற்சர்லாந்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரைப் பாசமுள்ள அப்பா, அம்மா, கைதடியில் வசிக்கும் அப்பப்பா - கதிரவேலன், அப்பம்மா- தவமணி, அம்மப்பா - கனகலிங்கம், அம்மம்மா - சத்தியவதி மற்றும் தாத்தாமார்களான வாமதேவன் குடும்பம் (சுவிஸ்), மகாலிங்கம் குடும்பம், குணலிங்கம் குடும்பம், தேவதாஸ் குடும்பம், வேலுப்பிள்ளை குடும்பம் (டென்மார்க்), கந்தையா குடும்பம், அப்பம்மா தங்கமணி குடும்பம் (கைதடி), சுவிதா அன்ரி, கிருபதாஸ் மாமா, நிதி அத்தை (டென்மார்க்), யோகேஸ் மாமா லிதா அத்தை (பிரான்ஸ்), சசி சித்தப்பா (மலேசியா), இவர்களுடன் மணிவண்ணன் குடும்பம் (சுவிஸ்) மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் எல்லாம் வல்ல கைதடி கயிற்றசிட்டி கந்தன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அக்ஷயாவை வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அம்மப்பா
**வா.கனகலிங்கம்.**
கைதடி வடக்கு,
கைதடி.




## வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில்



மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் சிசுஉதான அலகு திறந்து வைக்கும் நிகழ்வு ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இடம்பெற்றபோது நிகழ்விற்குத் தலைமை தாங்கிய பாடசாலை அதிபர் எஸ். முரளீதரன் உரையாற்றுவதையும் அருகில் கிளைமுகாமையாளர் ரீ.சிவக்குமாரன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர்.



செலிங்கோ ஆயுள் பகுதியினர் மானிப்பாய் கிளையின் வாடிக்கையாளரான பண்டத்தரிப்பைச் சேர்ந்த உதயச்சந்திரன் - சுசீலா என்பவருடைய மரண இழப்பீட்டுத்தொகையாக ஒரு லட்சத்து ஐம்பத்திரெண்டாயிரம் ரூபா பெறுமதியான காசோலையினை அவரின் மகனாகிய உ.சுதாகரனிடம் மானிப்பாய் கிளையின் முகாமையாளர் அ.அசோக் கையளிப்பதையும் அருகில் விற்பனை முகாமையாளர், நிறைவேற்றுநர் பி.ஸ்ரலின் செல்வராஜன், சி.சுகந்தன், அ.பார்த்தீபன், விற்பனை ஆலோசகர் ப.தர்சிகா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.




இலங்கை வங்கியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 3ஆம் திகதி அனைத்துக் கிளைகளிலும் கொண்டாடப்பட்டது.

இதன்போது சுன்னாகம் மேற்றரக் கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

கிளைமுகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் வங்கிக் கொடியேற்றுவதையும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.குமாரவேல் தேசியக் கொடியேற்றுவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர் வி.எஸ்.நேசகுமார் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கலாநிதி சிவநித்தியானந்த சிவாச்சாரியார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அருட்தந்தை ம.யேசுரட்ணம் அடிகளார், வங்கி முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் மற்றும் வாடிக்கையாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள்: 39 பேர் பலி; 180 பேர் காயம்; வீடுகள் நிர்மூலம்!

## ஷியாக்கள் மீதான தாக்குதல்கள் நீடிப்பு

பக்தாத், ஓக. 11

ஈராக்கில் இடம்பெற்ற நான்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில், 39 பேர் கொல்லப்பட்டனர். 180 பேர் காயமடைந்தனர். 30 வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டன. காயமுற்றோரில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என அதிகாரிகள் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்கள்.

ஈராக்கிய வட நகரான மொசூலுக்கருகிலுள்ள ஷியாக்களின் கிராமமொன்றில், நேற்று திங்கட் கிழமை அதிகாலை இரு ட்ரக்குகளிலிருந்த குண்டுகள் அதி பயங்கரமாக வெடித்தன. இவற்றில் 23 பேர் பலியாயினர். நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

காஸ்னக் என்னும் இக்கிராமம், மொசூல் நகருக்கு கிழக்கே 20 கிலோ மீற்றர் ( 13 மைல்) தொலைவில் அமைந்துள்ளது. இங்கு ஷியாக்களே முற்றுமுழுதுமாக வசிக்கிறார்கள். தற்கொலைதாரிகள், குண்டுகள் நிரப்பப்பட்ட இரு ட்ரக்குகளைச் செலுத்தி வந்து இங்கு அவற்றை வெடிக்க வைத்துள்ளார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இக்குண்டுத் தாக்குதல்களில், தற்கொலை தாரிகளின் உடல்களும் சிதைந்துவிட்டன. பெண்கள், குழந்தைகள் ஆகியோர் உட்பட 23 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். காயமுற்றோரில் பலர் ஆபத்தான கட்டத்தில் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் இந்த அதிகாரிகள் அச்சம் தெரிவித்தார்கள்.

இக்குண்டுகள் வெடிப்பால் 30 வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. குண்டுகள் வெடித்த இடத்தில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. 500 யார் இடைவெளியில் இவ்விரு ட்ரக்குகளும் நிறுத்தப்பட்டு, குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களையடுத்து, இப்பகுதி பொலிஸாராலும், ஈராக்கிய பாதுகாப்புப் படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டது என உள்ளூரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்று திங்கட்கிழமை காலை தலைநகரான பக்தாத்திலுள்ள இரு இடங்களில் கார்க்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 16 பேர் கொல்லப்பட்டனர். ஏறத்தாழ 80 பேர் படுகாயமடைந்தனர். தற்கொலைக் கார்க் குண்டுத்தாரிகளின் உடல்களும் சின்னாபின்னமாகச் சிதறி விட்டன என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இவ்விரு கார்க்குண்டுத் தாக்குதல்களும், பக்தாத்திலுள்ள கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வரும் பகுதிகளுக்கருகில் நடத்தப்பட்டுள்ளன. அதிகாலையில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த தொழிலாளர்களே இக்குண்டுத் தாக்குதல்களில் குரூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

வட நகரான மொசூலை ஒட்டிய பகுதிகளில், வெள்ளிக்கிழமையும் ஷியாக்களை இலக்கு வைத்து, தொடர் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் நாற்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பெருந்தொகையானோர் காயமடைந்துள்ளனர். மரணித்தோரிலும், காயமுற்றோரிலும் பெருந்தொகையான பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

# ஆப்கான் விமானம் நடுவானில் கடத்தல்

ஆப்கானிஸ்தானிலிருந்து மேற்கு சீனாவின் சின்ஜியாங் பகுதியிலுள்ள உரும்கி நகருக்கு புறப்பட்ட விமானமொன்று நடுவானில் கடத்தப்பட்டது. வெடிகுண்டுகளை தாங்கள் வைத்திருக்கிறார்கள் எனக் கூறி, மிரட்டி கடத்தல்காரர்கள் இதைக் கடத்தியுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து உரும்கி விமான நிலையத்தில் இவ்விமானத்தை தரை இறக்க சீனா அனுமதிக்கவில்லை.

எனவே, இந்த விமானம் ஆப்கானிஸ்தானிலுள்ள கந்தகாருக்குத் திரும்பியது. இதில் எத்தனை பேர் பயணம் செய்தனர் எனத் தெரியவில்லை. அல்- குவைதா தீவிரவாதிகள் இவ்விமானத்தை கடத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

# ஜப்பானில் நில நடுக்கம்:

ஜப்பானின் மத்திய பகுதியில் ஞாயிற்றுக் கிழமை மாலை உள்ளூர் நேரப்படி 4.30 மணிக்கு சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.9 புள்ளிகளாகப் பதிவானது.

இந்த நில நடுக்கத்தால் தலைநகர் டோக்கியோவும், அதைச் சுற்றியுள்ள மாநிலங்களும் அதிர்ந்தன. இதைத் தொடர்ந்து ரயில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டது. இந் நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்படவில்லை. அதே வேளை, ஆழிப்பேரலை அபாயம் இல்லை என்று ஜப்பான் வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் நடைபெறும் போர் இன்னும் 40 வருடகாலம் நீடிக்கலாம்

## பிரிட்டிஷ் இராணுவத் தளபதி டேவிட் சொல்கிறார்

லண்டன், ஓக. 11

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் தலிபான்களுக்கு எதிரான போர் மேலும் 40 ஆண்டுகளுக்கு நீடிக்கும் என பிரிட்டிஷ் இராணுவத் தளபதி ஜெனரல் டேவிட் ரிச்சர்ட்ஸ் தெரிவித்தார்.

இவர், எதிர்வரும் 28 ஆம் திகதி இராணுவத் தலைமைத் தளபதியாகப் பதவி ஏற்கவிருக்கிறார். இவர் நிருபர்களிடம் கூறுகையில், ''1980களில் ரஷ்யா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியது. அப்போது அந்தப் பிராந்தியத்தை ஐரோப்பிய நாடுகள் கைவிட்டுவிட்டன. இது தவறானது'' என்றார்.

''அங்கு தலிபான்களுக்கு எதிரான போர் முடிவடைய இன்னும் 30 முதல் 40 ஆண்டுகள் ஆகலாம். ஆப்கானில் அந்நாட்டுத் தீவிரவாதிகள் மாத்திரம் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை. அவர்களோடு பாகிஸ்தான், மொராக்கோ, சவூதி, எகிப்து, கஜகஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தீவிரவாதிகளும் இணைந்துள்ளார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானில் இப்போது 9 ஆயிரம் பிரிட்டிஷ் சிப்பாய்கள் இருக்கிறார்கள்.

# கலிபோர்னிய சிறைக்கூட இனக்கலவரம் 11 மணி நேரம் நீடிப்பு; 250 பேர் காயம்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஓக. 11

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சினோ சிறைக்கூடத்தில் மூண்ட பயங்கர கலவரம் 11 மணித்தியாலங்களுக்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதில் 250 கைதிகள் காயமடைந்தனர். இவர்களில் படுகாயமடைந்த 55 கைதிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இச்சிறைக்கூடத்தில், சனிக்கிழமை கறுப்பர் இனக் கைதிகளுக்கும், வெள்ளையர் இனக் கைதிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஒருவரை ஒருவர் கைகளால் தாக்கிக் கொண்டனர். பின்னர் இது பெரும் கலவரமாக மாறியது.

அப்போது பொருள்கள் அடித்து நொறுக்கப்பட்டன. சிறைக்கூடத்துக்கு தீ வைக்கப்பட்டது. இரும்புத் தகடுகளாலும், கத்திகளாலும் பரஸ்பரம் தாக்கிக்கொண்டனர். சிறைக்கூடத்தின் சுவர்கள் இடிக்கப்பட்டன. கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன. கலவரத்தை அடக்கும் பணியில் சிறை அதிகாரிகள் ஈடுபட்டனர்.

எனினும், உடனடியாகக் கலவரத்தை அடக்க முடியவில்லை. சனிக்கிழமை இரவு ஏற்பட்ட கலவரம் ஞாயிற்றுக்கிழமை காலை வரை அதாவது சுமார் 11 மணி நேரம் நீடித்தது. பின்னர் அடக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கலவரத்தில் 250 கைதிகள் காயம் அடைந்தனர். இவர்களில் 55 பேருக்குப் படுகாயம் ஏற்பட்டது. இவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. சிறை ஊழியர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கலவரத்தின் போது கைதிகள் எவரும் தப்பவில்லை. இந்தத் தகவலை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கலிபோர்னியா மாகாணத்தில் 33 சிறைச்சாலைகளுள்ளன. அவற்றில் 10 சிறைகள் தெற்கு பகுதியிலுள்ளன. மற்ற சிறைகளுக்கும் கலவரம் பரவாமல் தடுக்க தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

# ஹொங்கொங்கில் சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

ஹொங்கொங், ஓக.11

சீன அரசால் கடந்த வருடம் கைது செய்யப்பட்ட 3 தொண்டர்களை விடுவிக்கக்கோரி ஜனநாயக ஆதரவாளர்கள் ஹொங்கொங்கில் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் நடத்தினார்கள்.

ஹொங்கொங்கைச் சேர்ந்த ஹுவாங் கி, தான் ஷு வோரென், சூ ஷியாங் ஆகிய மூவரும் சீன அரசின் பல்வேறு திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள். இதனால் இவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஹுவாங் கி, தான் ஷுவோரென் ஆகிய இருவருமே மே 2008 இல் சிசுவான் மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் இடம்பெற்ற அரசின் மீட்பு நடவடிக்கைகளை விமர்சித்துப் பேசிவந்தனர்.

சட்டத்தரணியான சூ ஷியாங், அரசின் கொள்கைகளுக்கு எதிரான வழக்குகளில் வாதாடி வந்தவர். இதனால் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அணு ஆயுதப் பொருள்களை நான்கு ஆண்டுகளில் மீட்போம்

## ஐ.நா.விற்கான அமெரிக்கத் தூதுவர் ரைஸ்

வாஷிங்டன், ஓக. 11

உலக நாடுகளில் பாதுகாப்பற்ற நிலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் புளூடோனியம் அனைத்தையும் 4 ஆண்டுகளில் பெற்று, அணு ஆயுதப் பரவலைத் தடுப்போம் என அமெரிக்கா கூறியுள்ளது.

பாதுகாப்பற்ற நிலையிலுள்ள அணு ஆயுதங்கள், அணு ஆயுதம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கதிர்வீச்சுப் பொருள்கள் ஆகியவற்றினால் அணு ஆயுதங்கள் தவறான கைகளுக்குச் சென்று விடும் அபாயம் உள்ளது என அமெரிக்கா கூறி வருகிறது.

அப்படிப்பட்ட அணு ஆயுதங்களையும், புளூடோனியம் உள்ளிட்ட அணு ஆயுதப் பொருள்களையும் வாங்கி அதன் மூலம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்காமல் தடுக்கப்படும் என ஐ.நாவிற்கான அதன் தூதர் சூசன் ரைஸ் கூறியுள்ளார்.

ஐ.நா. அவைக்கு வெளியே இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த சூசன் ரைஸ், அணு ஆயுதங்கள் சோதனை தடுப்பு உடன்படிக்கையிலும் (சி.டி.பி.டி) அணு குண்டு வெடிப்பொருள்கள் தயாரிப்பு தடுப்பு உடன்படிக்கையிலும் அமெரிக்கா கையெழுத்திடவுள்ளது என்றும் கூறியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவைக்கான தலைவர் பொறுப்பை செப்ரெம்பர் மாதத்திற்கு அமெரிக்கா ஏற்கிறது. அப்போது அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது குறித்தும், அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைப்பது குறித்தும் விவாதிக்க பாதுகாப்புச் சபையின் அனைத்து உறுப்பினர்களின் கூட்டமொன்றை சூசன் ரைஸ் கூட்டவுள்ளார். அக்கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் பேசவுள்ளார்.




# பாகிஸ்தானில் கடும் மோதல்: தலிபான்கள் உட்பட 14 பேர் பலி

இஸ்லாமாபாத், ஓக. 11

பாகிஸ்தானில் இரு சாராருக்கிடையே மூண்ட கடும் மோதலில் 10 தலிபான்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். மொஹமந்த் பகுதியில் கவஸாய் என்னுமிடத்தில் சனிக்கிழமை இரவு இம் மோதல் இடம்பெற்றது.

மாலிக் அஜ்மல் கான் தலிபான்களுக்கு எதிரான அமைதிக்குழுவின் தலைவர் ஆவார். இவர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்.

இவர் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பிலிருந்து விலகி வந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார். இதனால் ஆத்திரமடைந்த தலிபான்கள் இவர் இருந்த பகுதியில் தாக்குதல் நடத்த வந்தனர். அப்போது இரு பிரிவினருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

இதில் மாலிக், இவரது 3 ஆதரவாளர்கள் மற்றும் 10 தலிபான்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

# நம்பகமான தேர்தல்களே அவசியம்: அங்கோலாவில் ஹிலாரி வலியுறுத்து

லுவெண்டா, ஓக. 11

அங்கோலாவில் நம்பகமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், அங்கோலாவின் தலைநகரான லுவெண்டாவில் இடம்பெற்ற சிரேஷ்ட அங்கோலா அதிகாரிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

11 நாள்களைக் கொண்ட ஆபிரிக்க விஜயத்தை மேற்கொண்டுள்ள ஹிலாரி கிளின்ரன் மூன்றாம் விஜயத்தை மேற்கொண்டு அங்கோலா வந்தடைந்தார். லுவெண்டாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், ''மனித உரிமைகள் கிரமமாகப் பேணப்படவேண்டும்'' என்றும் கோரினார்.

2002 ஆம் ஆண்டு, சிவில் யுத்தம் முடிவடைந்தது. அதற்குப் பின்னர் அங்கோலா துரிதமாக முன்னேற்றமடைந்து வந்துள்ளது. இது பெரிதும் வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகும் என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

''நல்ல நிருவாகம் அவசியம். அதுபோல் பலமான ஜனநாயகக் கட்டமைப்புத் தேவை. அதே வேளை, ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அதிக அக்கறை செலுத்தப்படவேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

அங்கோலா வெளிவிவகார அமைச்சர் அஸுன்காவோ டொஸ் அன்ஜோஸ், எண்ணெய் வளத்துறை சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரை சந்தித்த பின்னர், ஹிலாரி கிளின்ரன் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

# ஆப்கானில் குண்டுத் தாக்குதல்: 3 பிரிட்டிஷ் சிப்பாய்கள் மரணம்

லண்டன், ஓக. 11

ஆப்கானிஸ்தானின் லஷ்கர்-ஹா வட பகுதியில் பிரிட்டிஷ் இராணுவச் சிப்பாய்களின் வாகனமொன்று வீதியோர குண்டுவெடிப்பில் சிக்கியது. இதில் வாகனம் சுக்கலாக நொறுங்கியது.

இச்சம்பவத்தில் பிரிட்டிஷ் இராணுவச் சிப்பாய்களில் மூவர் பலியாகினர். ஒருவரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இந்த தகவலை பிரிட்டிஷ் அரசின் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதல் பிரிட்டிஷ் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை 195 பேர் பலியாகியுள்ளனர். கடந்த மாதத்தில் மட்டும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

# நேபாள மன்னர் கொலை: பொறுப்பேற்றவர் கைது

காத்மாண்டு, ஓக. 11

நேபாள மன்னராக இருந்த பிரேந்திரா உட்பட அவரது குடும்பத்தினரைக் கொன்றவர் தாம்தான் எனக் கூறியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாள மன்னராக இருந்த பிரேந்திரா, அவரது மனைவி, மகன், மகள் ஆகியோர் உட்பட அவரது குடும்பத்தினர் 9 பேர் 2001 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இந்தக் கொலைகளை பிரேந்திரா மகன்தான் செய்தார். பின்னர் அவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என அப்போது கூறப்பட்டது.

இந்நிலையில் மன்னரையும், அவர் குடும்பத்தினரையும் கொன்றவர் தாம்தான் என துல் பிரசாத் ஷேர்சான் என்பவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

59 வயதான இவர், தாம் நேபாள புலனாய்வுத்துறையின் தலைவராகப் பணியாற்றியுள்ளார் என்றும் கூறியுள்ளார். இவர் இவ்வாறு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்துக் கொண்டிருந்த போதே, இது தொடர்பான தகவல் பொலிஸாருக்கு எட்டிவிட்டது. இதையடுத்து, விரைந்து வந்த பொலிஸார், பேட்டியை முடித்துவிட்டு வெளியே வந்தபோது இவரைக் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் மறுவாழ்வுப் பணிகளில் வேகம் தேவை என்கிறார் கருணாநிதி

சென்னை, ஓக.11

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழர் மறுவாழ்வுப் பணிகளில் இன்னும் வேகம் தேவை. இதில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவிப்போம் - என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

தமிழகத்தில் பன்றிக்காய்ச்சலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இன்று சென்னையில் முக்கிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்த இருப்பதாகவும் முதல்வர் கூறினார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இந்த விவரங்களை தெரிவித்தார்.

அப்போது அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு -

கே - இலங்கையில் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் தொடங்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே?

ப - யாரோ ஒரு சாமியார் தவறாகச் சொல்லியிருப்பதைக் கேட்டு ஏமாறாதீர்கள்.



கே - இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் உங்களுக்கு திருப்தியாக உள்ளனவா?

ப - அது ஆரம்பமாகி உள்ளது. இன்னும் வேகம் தேவை என்பது எங்கள் கருத்து. இதில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவிப்போம். நேற்றைய தினத்தோடு (அதாவது நேற்றுமுன் தினம்) தமிழ்நாட்டில் இருந்து தமிழக அரசின் சார்பில் 4 முறை தமிழர்களுக்கு உணவு, உடை போன்ற நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நான்காவதாக நேற்று (நேற்றுமுன்தினம்) அனுப்பப்பட்ட பொருள்களின் மதிப்பு 15 கோடி ரூபாவாகும்.

நாங்களும் அனுப்பியிருக்கிறோம் மத்திய அரசும் அனுப்பி இருக்கிறது.

கே - வள்ளுவர் சிலை திறப்பு மற்றும் சர்வக்ஞர் சிலை திறப்பு விழாக்கள் மூலம் இரு மாநில உறவுகள் வலுப்படுமா?

ப - நம்பிக்கையை நோக்கித்தான் முன்னேற வேண்டும்.

கே - பன்றிக்காய்ச்சல் வேகமாகப் பரவுகிறதே?.

ப - இன்று அதிகாரிகளுடன் இதற்கான முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் இதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

கே - பன்றிக்காய்ச்சலால் ஒரு சிறுவன் மரணமடைந்துள்ளான். பாடசாலைகளுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?

ப - இன்றைக்கு அறிவுரைகள் கூறுவதற்கு நாளைக்கு எதற்காக ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும். நாளைய (ஆதாவது இன்றைய) கூட்டத்தில் இதுபற்றி விரிவாக ஆலோசிக்கப்படும். பீதியைக் குறைக்க வேண்டிய கடமை படித்தவர்களுக்கு குறிப்பாக பத்திரிகையாளர்களுக்கு அதிலும் குறிப்பாக செய்தியாளர்களுக்கு இருக்கிறது - என்று கூறினார்.

## அப்துல் கலாம் தோன்றும் படம்

சென்னை, ஓக. 11



முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பெயரில், ஒரு சினிமா தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இதில் ஒரு காட்சியில், அப்துல் கலாம் தோன்றுகிறார். இந்தப் படத்துக்கு 'நான் அப்துல் கலாம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஸ்மைல் பவுண்டேசன் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஹிந்திப் படத்தை மாதவ் பண்டேவா இயக்கியிருக்கிறார்.

இந்தப் படத்தில் பிரபல ஹிந்தி நடிகர் குல்சன் குரோவர், பிரான்ஸ் நாட்டு நடிகை சோபி ஆகியோர் நடித்துள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்து ஏழைச் சிறுவன் ஒருவன் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின், 'அனைவரும் கனவு காணவேண்டும். மிகப் பெரிதாக கனவு காணுங்கள்' என்ற தாரகமந்திரத்தால் கவரப்பட்டு, அதே போல செயற்பட்டு வாழ்க்கையில் முன்னேறுவதை காட்டும் வகையில் இந்தப் படம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

இதில் ஒரு காட்சியில், அப்துல்கலாம் தோன்றுகிறார்.

# 3 வாரங்களில் காஷ்மீருக்குள் 50 தீவிரவாதிகள் ஊடுருவல்!

## மேலும் 1,500 பேர் தயாராகவுள்ளனராம்

ஸ்ரீநகர், ஓக. 11

கடந்த 3 வாரங்களில், பாகிஸ்தானிலிருந்து காஷ்மீருக்குள் 50 தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர். மேலும், 1,500 பேர் ஊடுருவத் தயாராக இருக்கின்றனர் என்ற அதிர்ச்சி தகவல் கிடைத்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலிருந்து எல்லை தாண்டி காஷ்மீருக்குள் ஊடுருவல் அதிகரித்துள்ளது. கடந்த 3 வாரங்களில் எண்ணற்றோர் ஆயுதங்களுடன் ஊடுருவி உள்ளனர். எத்தனை பேர் என்பது குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

குழுவுக்கு தலா 6 முதல் 10 பேர் வீதம், 7 குழுக்கள் ஊடுருவி இருக்கின்றனர் என தகவல் ஒன்று தெரிவிக்கிறது. ஆனால், மொத்தமாக 50 பேர் ஊடுருவியிருக்கின்றனர் என மற்றொரு தகவல் கூறுகிறது.

இருப்பினும், நேற்றுமுன்தினம் பந்திப்போரா மாவட்ட காட்டுப்பகுதியில் நடந்த துப்பாக்கிச் சண்டையில், 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டு விட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். இத்தீவிரவாதிகள், லஸ்கர் - இ - தொய்பா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலும், சில நாள்களுக்கு முன்பு, குப்வாரா மாவட்டத்தில் நடந்த வெவ்வேறு துப்பாக்கிச் சண்டைகளில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இச்சண்டைகளில் 3 இராணுவத்தினரும் பலியானார்கள்.

இதற்கிடையே, காஷ்மீருக்குள் ஊடுருவுவதற்காக, மேலும் 1,500 தீவிரவாதிகள் தயார் நிலையில் எல்லையில் காத்திருக்கின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளன.

குளிர்காலத்தில் ஊடுருவல் பாதையில் 20 அடி உயரத்துக்கு பனி குவிந்து விடும். எனவே, அதற்கு முன்பாக ஊடுருவ அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதை முறியடிக்க இராணுவத்தினர், எல்லையில் இரவும், பகலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், சுதந்திர தினத்தையொட்டி மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், ஊடுருவலைத் தடுப்பது குறித்தும், ஜம்மு அருகே உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில், மாநிலப் பொலிஸ் டி.ஜி.பி. உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சென்னைச் சிறுவன் நேற்றுப் பலி!

சென்னை, ஓக. 11

பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சென்னை வேளச்சேரியைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுவன் சஞ்சய் நேற்று உயிரிழந்தார்.

சிறுவன் சஞ்சய்க்கு கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தும்மல், இருமல் ஏற்பட்டது. பின்னர் காய்ச்சல் அடித்தது. இதனால் வடபழனியில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.

இந்த நிலையில் அவனுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டது. அதன் காரணமாக அவன் உடல் மிகவும் சோர்ந்தான். இதன்காரணமாக சஞ்சய்க்கு ரத்த அணுக்களின் எண்ணிக்கை குறைந்தது. சிறுநீர் வெளியேறுவது குறைந்தது.

சிறுவனின் உடல் நிலை மேலும் மோசமானதால் அங்கிருந்து சேத்துபட்டில் உள்ள மற்றொரு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். அவன் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டான்.

இந்த நிலையில் சிறுவனுக்கு காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து, அவனது ரத்த மாதிரி சென்னை கிண்டியில் உள்ள கிங் ஆராய்ச்சி மையத்துக்கு வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டு, பன்றிக்காய்ச்சல் இருப்பது ரத்தப் பரிசோதனையில் உறுதியானது.

பன்றிக் காய்ச்சல் காரணமாக சிறுவனின் கல்லீரல், நுரையீரல், சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு மயக்க நிலை ஏற்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கை சுவாசக் கருவி உதவியுடன் இருந்த போதிலும் சில மணி நேரத்தில் அவனது உயிர் பிரிந்தது.

## சிறுவனின் அண்ணனுக்கும் தீவிர சிகிச்சை

பன்றிக்காய்ச்சலால் பலியான சென்னை சிறுவன் சஞ்சய்யின் அண்ணனுக்கும் பன்றிக் காய்ச்சல் அறிகுறி இருப்பதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

குடியிருப்பில் வசிப்பவர்கள் அனைவருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பன்றிக்காய்ச்சல் தடுப்பு மாத்திரைகள் வழங்க சுகாதாரத்துறை திட்டமிட்டுள்ளது. மேலும் இருமலுடன் காய்ச்சல் இருக்கும் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என பெற்றோர்களுக்கு தமிழக அரசு சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# பன்றிக்காய்ச்சல் குறித்து மன்மோகன் சுகாதார அமைச்சருடன் ஆலோசனை

புதுடில்லி, ஓக. 11

இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் பன்றிக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து டில்லியில் நேற்றுமுன்தினம் சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத்துடன், பிரதமர் மன்மோகன் சிங் அவசர ஆலோசனை நடத்தினார்.

பன்றிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 10 தினங்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்து திரும்பிய வெளிநாட்டு இந்தியர் பிரவீண் படேல் (வயது - 43), ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆமதாபாத்தில் உள்ள வைத்தியசாலையில் உயிரிழந்தார். இவருடைய மனைவியும் பன்றிக்காய்ச்சல் காரணமாக இதே வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்நிலையில், பன்றிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத்துடன் பிரதமர் ஆலோசனை மேற்கொண்டார். மாநில அரசுகளுடன் சுகாதாரத் துறையை இணைந்து செயற்படுமாறு அவர் அப்போது கேட்டுக்கொண்டார்.

பன்றிக்காய்ச்சல் நோய் தொற்று குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோய் குறித்த தவறான பிரசாரத்தைக் களையவும் பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்க சுகாதாரத் துறை அமைச்சுக்கு பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார் என ஆசாத் தெரிவித்தார்.

# ஈரமில்லாத நிலமும், நெஞ்சமும் யாருக்கும் பயன்பட மாட்டாது!

## ரஜினிகாந்த் தத்துவம்

சென்னை, ஓக. 11



''ஈரம் இல்லாத நிலமும், நெஞ்சமும் யாருக்கும் பயன்படாது'' - என்று நடிகர் ரஜினிகாந்த் பேசினார்.

இயக்குநர் ஷங்கர் தனது சொந்தப் பட நிறுவனமான எஸ்.பிக்சர்ஸ் சார்பில் 'ஈரம்' என்ற புதிய படத்தை தயாரித்திருக்கிறார்.

இப் படத்தின் பாடல்கள் சீடியை வெளியிட்டுப் பேசிய ரஜினி மேலும் கூறியவை வருமாறு -

எனக்கு சிவாஜி, எந்திரன் படங்களின் மூலம் நல்ல உழைப்பும், நல்ல சிந்தனையும் உள்ள ஷங்கர் நண்பராகக் கிடைத்திருக்கிறார்.

ஷங்கர் எப்போதுமே படங்களின் வெற்றி - தோல்வியை மிகச் சரியாகக் கணித்துச் சொல்வார். 'புலிகேசி' படம் வர்த்தக ரீதியாக வெற்றி பெறும் என்றார். 'வெயில்' படத்துக்கு நிச்சயம் விருது கிடைக்கும் என்றார். கல்லூரி படத்தை மக்கள் ஏற்றுக்கொண்டால் வெற்றிபெறும் என்றார். இப்போது, 'ஈரம்' படம் நிச்சயம் வெற்றி பெறும் என்று கூறியிருக்கிறார். எனக்கு ஷங்கரிடம் பிடித்த விடயம் இதுதான்.

ஒரு நல்ல தகவலை இங்கே தெரிவிக்கிறேன். 'எந்திரன்' படம், 85 சதவீதம் முடிவடைந்து விட்டது.

நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு விடயத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். நான் மிகவும் மதிக்கின்ற நடிகர்களில் ஒருவர், எம்.ஆர்.ராதா. அவர், வி.ஜி.பி. தோட்டம் திறப்பு விழாவில் கலந்துகொண்டார். விழாவில் பேசியவர்கள் எல்லோரும், 'வி.ஜி.பன்னீர் தாஸூம், சந்தோஷமும் உழைப்பால் முன்னுக்கு வந்தவர்கள் என்று பேசினர்.

கடைசியாகப் பேசவந்த எம்.ஆர்.ராதா, 'இவர்கள் மட்டும்தான் உழைக்கிறார்களா? நாமெல்லாம் உழைக்கவில்லையா?

நாம் மாடு மாதிரி உழைக்கிறோம். அவர்கள் மனிதர்கள் மாதிரி உழைக்கின்றனர். அவர்கள் அறிவோடு உழைக்கிறார்கள். நாமெல்லாம் அறிவில்லாமல் உழைக்கிறோம். இதுதான் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்றார்.

அவர் சொன்ன மாதிரி உழைக்கணும். புத்திசாலித்தனமாக உழைக்கணும். 'ஈரம்' படத்தில் புத்திசாலித்தனமாக உழைத்திருக்கிறார்கள்.

ஈரம் இல்லாத நிலம் யாருக்கும் பயன்படாது. அதுமாதிரி ஈரம் இல்லாத நெஞ்சமும் யாருக்கும் பயன்படாது. - என்றார்.

## செந்தமிழில் பேசி அசத்தினார் ரஜினியின் மகள் சௌந்தர்யா

சென்னை, ஓக. 11



பலரும் ஆங்கிலத்தில் பேசிய நிகழ்ச்சி ஒன்றில் சௌந்தர்யா ரஜினி மட்டும் தனது கணீர் குரலில் தமிழில் பேசி அசத்தினார்.

துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மருமகள் கிருத்திகா உதயநிதியின் 'இன்பாக்ஸ் 1305' பத்திரிகையின் ஓராண்டு நிறைவு விழா சென்னையில் நடந்தது.

சௌந்தர்யா ரஜினி, சங்கீதா விஜய் உள்ளிட்ட ஏராளமான பிரபலங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

பலரும் ஆங்கிலத்தில் பேசிய நிகழ்ச்சியில் சௌந்தர்யா ரஜினி மட்டும் தனது கணீர் குரலில் தமிழில் பேசி அசத்தினார்.

# கல்லெறிந்து இரத்தம் சொட்டச் சொட்ட விளையாடப்படும் புதுரக விழா இந்தியாவில்

நைனிடால், ஓக. 11

பல மாநிலங்களில் ஜல்லிக்கட்டு, உறியடி போன்ற பாரம்பரியமிக்க பல்வேறு வீர விளையாட்டுகள், திருவிழா நடத்தப்படுவதை கேள்விப்பட்டிருப்போம். ரத்தம் சொட்டச் சொட்ட கல்லெறியும் விழா தெரியுமா? உத்தரகாண்ட் மாநிலத்தில்தான் இந்தப் புதுமையான கல்லெறியும் திருவிழா நடத்தப்படுகிறது.

உத்தரகாண்ட் மாநிலம் சம்பாவத் மாவட்டத்தில் ஆண்டுதோறும் ரக்ஷாபந்தன் நாளன்று இந்த திருவிழா நடந்து வருகிறது. பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் சம்பாவத் மாவட்டமும் ஒன்று, ரக்ஷா பந்தன் நாளன்று, அங்குள்ள வாரா தேவி கோயில் முன் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் கூடுகின்றனர்.

இதிலிருந்து கல் சண்டை விளையாட்டில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 7 குழுக்களாக இவர்கள் பிரிக்கப்படுகின்றனர். இராணுவ இசை முழங்கப்படுகிறது. 7 குழுக்களும் ஒவ்வொரு குழு மீது கற்களை வீசுகிறது. ரத்தம் சொட்டச் சொட்ட கடும் சண்டை நடக்கிறது.

8 முதல் 10 நிமிடம்தான் இந்தக் கொடூரச் சண்டை நடக்கிறது. பின்னர், சண்டை போட்டவர்களும், பார்வையிட்டவர்களும், வாராயை வழிபட்டு ஒன்றாக அமர்ந்து சாப்பிடுகின்றனர். இதில் சம்பாவத் மாவட்டத்தை சேர்ந்தவர்களை தவிர வேறு யாரும் கலந்து கொள்ள முடியாது.

சம்பாவத் பகுதியை 14ஆம் நூற்றாண்டில் குமான் வம்சத்தரசர்கள் ஆண்டு வந்துள்ளனர். அப்போது, வாரா தேவிக்கு ஆண்டு தோறும் ஒருவரை நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. ஒருமுறை, ஒரே மகன் உள்ள குடும்பத்துக்கு நரபலி கொடுக்க வேண்டிய முறை வந்தது. ஒரே மகனின் தாய் பதறினாள். வாராயே! எனக்கு இருப்பது ஒரே மகன். அவனையும் உனக்கு நரபலி கொடுத்துவிட்டால் என் குடும்பத்துக்கு வேறு கதியில்லை. நீதான் அருள் பண்ண வேண்டும் என்று வாராயிடம் கதறினாள்.

அப்போது தேவி, ''நரபலி எனக்குத் தேவையில்லை. ஒரு மனிதனின் உடலில் உள்ள ரத்தத்தை ஆண்டு தோறும் மொத்தமாக எல்லாரும் சேர்ந்து கொடுத்தால் போதும் என்று கூறினாள். இதையடுத்து, கல்லடி சண்டை நடத்தி ஒரு மனிதனின் உடலில் உள்ள மொத்த ரத்தம் அளவுக்கு வாராய்க்கு படைப்பது வழக்கமானது என்று ஒரு வரலாற்று ஆய்வாளர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் திட்டங்களுக்கு முழு ஆதரவை புதிய நிர்வாகத்துக்கு வழங்குவோம்

## தமிழரசுக் கட்சி முதன்மை உறுப்பினர் றெமிடியஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.மாநகர சபை ஆட்சியைப் பொறுப்பேற்கும் புதிய நிர்வாகம் அபிவிருத்தி உட்பட தமிழருக்கு நன்மையளிக்கும் விடயங்களை முன்னெடுக்குமானால், அதற்கு பூரண ஆதரவை வழங்குவோம்.

தமிழரசுக் கட்சியின் முதன்மை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.றெமிடியஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகரசபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற அவர் மேலும் கூறியதாவது:-

இத் தேர்தல் நேர்மையாக நடைபெற்றுள்ளது. தேர்தல் பணிகளில் ஈடுபட்ட சிங்கள, தமிழ் தேர்தல் உத்தியோகத்தர்கள் தமது பணிகளை சிறப்பாகச் செய்துள்ளார்கள்.

இத் தேர்தலில் வெற்றி பெறுவோம் என எதிர்பார்த்தோம். ஆனால் மக்கள் அக்கறையின்றி வாக்களிக்காமல் விட்டுவிட்டார்கள். இப்போதைய நிலையில் தேர்தல் தேவைதானா என்ற கேள்வி அண்மைக்கால துயரச் சம்பவங்களிலிருந்து மக்கள் விடுபடாத நிலைமை, மனப்பயம் மற்றும் வாக்குகள் எதிர்பார்க்கப்பட்ட நல்லூர் பகுதியில் வருடாந்தப் பெருந் திருவிழாக் காலம் இவை போன்ற ஏராளமான காரணங்களினால் மக்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டார்கள். இது கவலைக்குரியது தான்.

இருந்த போதிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். அபிவிருத்தி தமிழ் மக்களுக்கான நன்மைகள் போன்ற நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இது எதிர்பாராத தோல்வி. இருப்பினும் எமது பணியைத் தொடர்வோம் - என்றார். (1-236)



யாழ்.பிரதம தபாலகத்தில் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி நேற்று திறந்து வைக்கப்பட்டது. தபால்மா அதிபர் எம்.கே.பீ.திஸநாயக்கவும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பயிற்சிக் கல்லூரியைத் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். வடபிராந்திய பிரதித் தபால்மா அதிபர் வி.குமரகுரு அருகில் காணப்படுகிறார்.

# நாவற்குழி வீடமைப்புத் திட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

யாழ்ப்பாணம், ஓக. 11

நாவற்குழி, மகிந்தபுரம் வீடமைப்புத் திட்ட மக்களின் அழைப்பையேற்று அப்பகுதியின் குறைபாடுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியும் முகமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று அங்கு சென்றிருந்தார்.

அப்பகுதி மக்களால் உற்சாகமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் வரவேற்கப்பட்ட அமைச்சர், அப்பகுதியில் அமைந்துள்ள வீடுகளையும் குறிப்பாக சேதமடைந்த மக்கள் குடியிருப்புகளுக்கு ஏற்ற நிலையில் இல்லாத வீடுகளையும் சென்று பார்வையிட்டதுடன், இவ்வாறான வீடுகளைப் புனரமைத்து வெகு விரைவில் மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்பாடு செய்யக் கூடிய நடவடிக்கைகளை தான் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

இதன் பின்னர் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அமைச்சர்-

இக் குடியேற்றத்திட்டத்தின் குறைபாடுகள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் இக் குடியேற்ற மக்களின் முக்கிய தேவையாகவுள்ள வீட்டு உறுதிப்பத்திரங்கள் தொடர்பிலான பிரச்சினைகள் வெகு விரைவில் முழுமையாக தீர்க்கப்படும். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதால் இக் குடியேற்ற மக்களது அனைத்துப் பிரச்சினைகளையும் படிப்படியாக தீர்ப்பேன் - என்று தெரிவித்தார். (1)

# நல்லூர் ஆலயத்தில் இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் ஆரோக்கிய வாழ்விற்கான போசனை வழிகாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ள இல,375, பருத்தித்துறை வீதியில் ஆரோக்கியமான மனித வாழ்விற்கான போசனை வழிகாட்டல் நிகழ்வு யாழ். போஷாக்கு சமூகத்தினரால் இலங்கை வங்கியின் அனுசரணையில் தினமும் நடைபெற்று வருகின்றது.

இதில் வயது வேறுபாடின்றி சகலரும் கலந்து பயன் பெற்று ஆரோக்கியமான வாழ்க்கை அமைத்திடவும், உடல் சம்பந்தமான நோய்க்கு ஆலோசனையும் அறிவுரையும் பெறவும் இந்த நிகழ்வு முற்றிலும் இலவசமாக யாழ்.போஷாக்கு சமூகத்தினரால் பட விளக்கத்துடன் நடத்தப்படுகின்றது.

அனைவரும் பங்குபற்றி பயன் பெறுமாறு இலங்கை வங்கியும் யாழ்.போஷாக்கு சமூகத்தினரும் கேட்டுள்ளனர். (1)

# யாழ்.மாநகர மக்கள் தேர்தலில் தவறான முடிவை எடுத்து விட்டார்கள்

## த.வி.கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்ப்பாணம் மாநகர மக்களில் 18 சதவீதமானோர் வாக்களித்ததால் மக்களுக்கு தேர்தலில் ஈடுபாடு இல்லை என்பதனைக் காட்டிலும் வாக்களித்த மக்கள் தவறான முடிவை எடுத்துள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி. மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு பிரஸ்தாபித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எத்தனையோ ரூபா கோடிக்கணக்கில் விளம்பரங்கள் செய்தும் அமைச்சர்களை அழைத்து ஆரவாரம் காட்டியும் செலவு செய்த பணத்தை அரசு யாழ்.மாநகர அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருந்தால் மக்கள் ஓரளவு சந்தோசமடைந்திருப்பார்கள்.

வழமைபோல் மானம் வீரம் என்று வசனம் பேசி தமிழ் மண்ணை தமிழர் ஆள வேண்டும் என்று தமிழ் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் கூட்டம் அறிக்கைகளைக் கொடுத்துவிட்டு வெளிநாட்டில் மறைந்து கொள்வார்கள். பாதிக்கப்படுவது எமது மக்களே.

அனுபவம் தந்த பாடத்தை இவர்கள் அடிக்கடி மறந்து விடுகிறார்கள். முள்ளிவாய்க்கால் பகுதியில் முடங்கிக் கிடந்து விட்டு இப்போது முட்கம்பி வேலிக்குள் அகப்பட்டு தவிக்கும் எமது வன்னி உறவுகளின் நிலை யாழ்.மாநகர மக்களுக்கும் வராமல் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். வீரவசனம் பேசுபவர்கள் சிந்திக்க வேண்டும்.

அன்று தொட்டு இன்றுவரை வன்னி மக்கள் பட்ட துன்ப துயரங்களை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எடுத்துக் கூறி இடித்துரைத்து வந்தவன் நான் ஒருவன் மட்டுமே என்பதை சர்வதேசமே அறியும். அதனை யாழ்.மாநகரசபை வாசிகளுக்கு தெரியாமல் போனது அவர்களின் துரதிஷ்டமே - என்று உள்ளது. (அ)

# கனடாவில் அரசியல் தஞ்சம் கோருகிறார் ஈழவேந்தன்



கொழும்பு, ஓக. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் கனடாவிடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று தெரியவருகிறது.

பாங்கொக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'ஏசியன் ரிபியூன்' என்ற இணையத்தளம் இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கனடாவில் 'நாடு கடந்த அரசு' தொடர்பாகவும் 'தமிழர் அரசியல்' தொடர்பாகவும் கனேடிய தமிழ் மக்களிடையே பிரசாரம் செய்வதற்காகவே உண்மையில் இவர் கனடா செல்கின்றார் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கனேடிய அரசு ஈழவேந்தனுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொள்வதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழவேந்தன் முன்னரும் பல தடவைகள் கனடாவுக்கு சென்றிருக்கிறார். இந்நிலையில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் ஈழவேந்தனின் பின்னணி, அவரால் முன்பு கனடாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியன குறித்து கனேடிய பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# நல்லை உற்சவ காலத்தில் நல்லூரில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை ஒட்டி பருத்தித்துறை வீதி, அரசடிசந்தியில் வீதித் தடைக்கு அருகில் உள்ள வீட்டில் தினமும் இரத்ததானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தினமும் பி.ப. 4 மணியில் இருந்து இடம் பெறும் இந்த இரத்ததான நிகழ்வு தேர், தீர்த்தத் திருவிழா நாள்களில் முழுநேரமும் நடைபெறும் என்று யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

# ராகமை வைத்தியசாலையைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 11

ராகமை வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேற்படி வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடகொழும்பு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ஒருவரால் மேற்படி ஊழியர் தாக்கப்பட்டார் எனவும் இதுகுறித்து ராகமை வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிடப்பட்டபோதும் "நிர்வாகம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அகில இலங்கை சுகாதார சேவையாளர் இயக்கத் தலைவர் காமினி குமார துங்க தெரிவித்தவை வருமாறு -

இச்சம்பவம் குறித்து வைத்தியசாலைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ள போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது. இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டால் நாம் எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டி நேரும்.

டாக்டர் வைத்தியசாலை நிர்வாகமும் ஒழுக்க கட்டுப்பாடுகளைப் பேணும் முறையில் சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# வணங்கா மண் நிவாரணப் பொருள்களை இவ்வாரத்தில் விநியோகிக்க ஏற்பாடு

கொழும்பு, ஓக. 11

வணங்காமண் (கப்டன் அலி) கப்பல் மூலம், ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்களால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் இவ்வாரம் வவுனியாவிலுள்ள அகதிகளுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வணங்காமண் கப்பல், முன்னர் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட போது, அதிலிருந்த பொருள்களை சென்னைத் துறைமுகத்தில் வைத்து இந்திய செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று 'கொலராடோ' என்ற கப்பல் மூலம் கொழும்புக்கு கொண்டு வந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தது.

கடந்த சுமார் ஒருமாத காலமாகக் கொழும்புத் துறைமுகத்தில் தவம் கிடந்த இந்த நிவாரணப் பொருள்களை அகதிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிவாரணப் பொருள்களை வவுனியாவுக்கு கொண்டு சென்று அங்குள்ள தமது மாவட்டக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி, இவ்வார இறுதியில் அவற்றை அகதிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-சி)

# பொலனறுவையில் விபத்து; 11 போர் காயம்

கொழும்பு, ஓக. 11

ஹபரணை - பொலன்னறுவை பிரதான வீதியின் ஜயந்தி மாவத்தையில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலன்னறுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றும் வானும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் சிறுமி ஒருவர் உட்பட 8 பெண்கள் அடங்குகின்றனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். - கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயண அனுமதியுடன் செல்பவர்கள் அதைக்காட்டி பயணத்தை மேற்கொள்ளலாம். கொழும்புக்கு ஒருவழிப்பயணக் கட்டணமாக இப்போது 1,900 ரூபா அறவிடப்படுகின்றது.

அதேவேளை -

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான சொகுசு பஸ் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அதற்கான ஒரு வழிக் கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது,

அத்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய நகரங்களுக்கும் சொகுசு பஸ் சேவையினை ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - யாழ். சொகுசு பஸ் சேவை கொழும்பு - மதவாச்சி, மதவாச்சி - யாழ்ப்பாணம் என இரு கட்டங்களாக நடத்தப்படும் என்றும் முதல் கட்டமாக ஐந்து சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

(அ-சி-1)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் என்று காத்திருக்கிறோம். வவுனியா நகரசபையில் தலைமைப் பொறுப்பை ஏற்று அதன் நிர்வாகத்தை நல்ல முறையில் கொண்டு செல்வது குறித்து ஏனைய கட்சிகளுடன் பேசி வருகிறோம். குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஓர் உறுப்பினரை எமக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டிருக்கிறோம். இது தொடர்பாக அக்கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் எமது கட்சி பேச்சு நடத்தி வருகிறது. அவர்கள் எமக்கு ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார்.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹஸன் அலி கூறுகையில், ''தமிழரசுக்கட்சியிடமிருந்து இந்த விடயம் குறித்து உத்தியோகபூர்வ அழைப்புக் கிடைத்தால் அதனைப் பரிசீலிக்க எமது கட்சி தயார்'' என்று கூறினார்.

(அ-சி)

## கே.பியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் வைத்து கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்ட கே.பி. பாங்கொங் ஊடாக இலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று தாய்லாந்து அரசு அறிவித்தது.

இலங்கை அரசும் கே.பி. எங்கு கைதுசெய்யப்பட்டார் என்பதை மர்மமாக வைத்திருக்கிறது.

இந்நிலையில் நேற்று மலேசியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது, மலேசியப் பிரதமர் கே.பி. கைது செய்யப்பட்டார் என்பதை உறுதிப்படுத்த முடியாது என்று தெரிவித்தார்.

(சி)

## கே.பியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி பொல்கொல்லை கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இப்பொழுது கே.பி. புலனாய்வுப் பிரிவினரால் படிப்படியாக விசாரிக்கப்பட்டு வருகிறார். இற்றை வரை இவர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் மூலம் புலிகளின் பல்வேறு நடவடிக்கைகளை நாம் அறிய முடிகின்றது. சர்வதேச மட்டத்தில் போதைப்பொருள் விற்பனை, ஆயுத விற்பனை, நாணய மாற்றுக்கள் போன்றவை மூலம் பல கோடிக்கணக்கான நிதியை சம்பாதித்திருக்கிறார்கள். அத்துடன பல கம்பனிகளின் உரிமையாளராகவும் இருந்து வந்திருக்கிறார்.

**அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் அடங்குவர்**

இப்பொழுது கிடைக்கப்பெற்றுவரும் தகவல்கள் ஊடாக உள்ளூரிலும் வெளியூரிலும் புலிகளுக்காகப் பேசியவர்களும், தொடர்புடையவர்களும் யார் யார் என்ற விவரங்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

பல அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்துடன் தொடர்புடைய இவ்வாறானவர்கள் சர்வதேச மட்டத்திலும் பெயர் போனவர்களாவர். - என்றார்.

கே.பியுடன் வேறு யாரையும் அரசு கைது செய்ததா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ''இல்லை. அவர் மாத்திரமே கைதானார். சர்வதேச புரிந்துணர்வு மற்றும் கொள்கை அளவில் கே.பியை ஒருபோதும் இந்தியாவிடம் கையளிக்க மாட்டோம். அவரைப்பற்றி இங்கு வந்து விசாரணை செய்வதற்கு இந்தியாவுக்கு அனுமதியளிக்கலாம். புலிகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்கள் எமது நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இருந்து வருவதால் அவர்கள் குறித்து அரசு மிகுந்த விழிப்புடன் உள்ளது. இற்றைவரை பல திடுக்கிடும் விவரங்கள் வெளியாகியுள்ளன. அவர்களின் பெயர்களும் விவரங்களும் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணிக்கவில்லை என தொடக்கத்தில் சர்வதேச மட்டத்தில் எழுப்பப்பட்ட புரளிகள் எல்லாவற்றையும் முன்வைத்தவர், கே.பியே. அவ்வமைப்பின் புதிய தலைவர் என வர்ணித்து கே.பியை பூதாகர நபராக உலகறிய எடுத்துக்காட்டப்பட்ட முயற்சிகள் அனைத்தும் புஷ்வாணமாகி விட்டன. ஊடகங்கள் பல இதில் முன்னணி வகித்தன.

**புலிகளைக் காப்பாற்றும் நோக்குடன்....**

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு யுத்தம் முடிவதற்கு மூன்று நாள்கள் மாத்திரமே இருக்கும் நிலையில் சர்வதேச மட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனையும் புலிகளைக் காப்பாற்றும் நோக்கிலேயே அமைந்ததாகும். என்றாலும் ஜனாதிபதி அவருக்குள்ள தன்னாதிக்கம் கொண்ட அதிகாரத்தின் கீழ் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உதாசீனம் செய்துவிட்டார். 15 - 20 ஆண்டுகள் வரை பிரபாகரனை பெரும் தலைவன் என் அடையாளம் காட்டி கே.பியையும் அதன் தலைவர்களில் ஒருவராகக் காட்டி உலகை ஏமாற்றிய நிகழ்வுகளும் பொய்த்து விட்டன.

கே.பி. ஏழு வருடங்களாக இலங்கை அரசால் தேடப்பட்டு வந்தவராவார். எமது புலனாய்வுப் பிரிவின் திறமையை இப்பொழுதுதான் உலகம் புரிந்துகொண்டு விட்டது. ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க முற்பட்டவர்களே கே.பியையும் காட்டிக் கொடுத்தனர். 30 ஆண்டுகளாக உலகை ஆட்டிப்படைத்த பிரபாகரனின் புலிகள் அமைப்பு இதன் பின்னர் எவ்வகையிலுமே தலைதூக்க இயலாது. இவரது நிழலில் நடமாடுகின்ற எவராலும் இந்நாட்டில் மீண்டும் தலைதூக்க இயலாது. இதனைக் கருத்திற்கொண்டோ தெரியவில்லை ஆசியாவில் ஒரு இஸ்ரேல் என இலங்கையை ஒரு பத்திரிகை வர்ணித்துள்ளது என்றார்.

(அ-சி)

## தமிழ்த்தேசியத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வாளர்கள், இதுபற்றிக்கருத்துவெளியிட்டனர்.

இது தொடர்பாக, குறித்த செய்திச் சேவை மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடம்பெற்று முடிந்த யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபை, ஊவா மாகாண சபைத் தேர்தல்கள், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பிற்பாடு அரசுக்கு மக்கள் மத்தியில் காணப்படும் செல்வாக்கு எத்தகையது என்பதைக் கண்டறிவதற்கான பரீட்சையாகவே அமைந்தன. யாழ். மாநகர சபை, ஊவா மாகாணசபை ஆகியவற்றில் அரசுக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஆனால், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுக் காண்பதற்கு அரசு இன்னமும் வெகுதூரம் செல்லவேண்டி இருக்கின்றது என்பதை தேர்தல் முடிவுகளை ஆழமாக அலசி ஆராய்கின்றபோது கண்டுகொள்ள முடியும்.

**பெரும்பாலான தமிழர்கள் அரசை நிராகரித்துள்ளனர்**

யாழ். மாநகர சபைத் தேர்தல், வவுனியா நகர சபைத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியத்துக்கான குரல் இன்னமும் வலுவாகவே ஒலித்துக்கொண்டிருக்கிறது என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன. தமிழ்த் தேசியத்துக்காகவே பெரும்பாலான தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள். அரசை நிராகரித்து இருக்கிறார்கள். வவுனியா நகர சபைத் தேர்தலில் தமிழர்களுக்காகவும், தமிழர்களின் வெற்றிக்காகவும் குரல் கொடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கு வெற்றி கிடைத் துள்ளது. வன்னி முகாம்களில் ஏறத்தாள 3 லட்சம் தமிழ் மக்களை அரசு அடைத்து வைத்திருப்பதற்கு எதிர்த்தே வவுனியா மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதும் வெளிப்படை.

**அவசர அவசரமான தேர்தல் பிரகடனம்**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்குத் தமிழர்கள் மத்தியில் அபார செல்வாக்கு உள்ளது என்று சர்வதேசத்துக்குப் படம் பிடித்துக் காட்டுவதற்காகவே அரசுத் தலைமை அவசர அவசரமாக யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகர சபை ஆகியவற்றில் தேர்தல் பிரகடனத்தை மேற்கொண்டது. ஆனால், அரசின் முயற்சி வெற்றி பெறவில்லை என்பதற்கு யாழ். மாநகர சபைத் தேர்தல் முடிவு சான்றாக உள்ளது. சுமார் 50 வீதமான வாக்குகள் யாழ்ப்பாணத்தில் அரசுக்கு எதிராகவே போடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தேர்தல் முடிவு தமிழ் மக்களின் தேவைகள் நிறைவேற்றிக் கொடுக் கப்ப டவேண்டும் என்பதையே சுட் டிக் காட்டுகின்றது.

யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபைத் தேர்தல்களில் தமிழர்கள் தமிழ்த் தேசியத்துக்காகவும், உரிமைகளுக்காகவும் வாக்களித்துள்ளனர் என்பதை சர்வதேச சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் அறிந்துகொள்ள முடிந்துள்ளது என்று அந்தச் செய்திச்சேவை மேலும் குறிப்பிட்டுள்ளது.

(அ-சி)


**கணிதபாட சித்திக்கான சிறப்பு வெளியீடு வெளிவந்து விட்டது**

பெறுபேற்று உத்தரவாதத்தை மேம்படுத்தும்
* O/L இலகு வினாக்கட்டமைப்பு
* 7வருட மாகாண மட்ட பொதுபரீட்சை தரம் - 09 விடைகளுடன்

அன்னைப்புத்தக சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்
தொகுப்பு- ஆர்.கே.மோகன்
(ஆசிரியர், தீவக கல்வி வலயம்)

**TITA**
**Rural IT Training Centre**
140 Navalar Road, Jaffna
114 Duch Road, Chavakachcheri

சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் இரு பயிற்சி நிலையங்களிலும். பாடசாலை விடுமுறையை முன்னிட்டு ஒரு மாத கால பயிற்சி நெறிகள் ஆரம்பம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Kids Programme
Basic Computer Application
Inter net & e-mail (10 Hrs)




புதிய பிரிவு 12.08.2009 ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்

**வங்கி போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்**

வங்கிப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல் தனியார், அரச, மத்திய, வங்கிகளுக்கான போட்டிப் பரீட்சைக் குரியது. கடந்த கால வங்கிப் பரீட்சைகளின் வினாத்தாள்கள், அத்துடன் மத்திய வங்கி குறிப்பேட்டு இதழ்கள் இலவச இணைப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளிவந்துள்ளன. தேவைப்படுவோர் முன்கூட்டியே பதிவு செய்யவும் 12.08.2009 முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். [illegible]

யாழ். நகரின் ஏக விநியோகஸ்தர்
அன்னை புத்தகசாலை,
இல 7, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 021 222 9881

**வெளிவந்து விட்டது**

Speed Marketing O/L - 2009
'பனரச' - Original
55 வினாத்தாள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வியும் வரலாறும் (5பாடங்கள்)
மாணவர்கள் சுயமாகவே தம்மை தயார்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது - விலை 455/=

**அன்னை புத்தக சாலை,**
இல 7, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 222 9881
எமது நல்லூர் உற்சவ கால சிறப்பு விற்பனை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA

CHEMISTRY - 2011 A/L (ENGLISH MEDIUM)

ATOMIC STRUCTURES
SAT, SUN, - (9.30-11.00) A.M
ENERGETICS
TUE, THU - (6.30-7.30) A.M
CHEMICAL CALCULATIONS
TUE, THU - (5.00-6.00) P.M
COMMENCE ON - 11/08/2009 (THU)
By - RAJAII

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2010 A/L

சேதன இரசாயனம்
SAT, SUN - (12.30 - 2.00) P.M
அயன் சமநிலை
TUE, THU - (6.00-7.00) P.M
வாயுக்கள்
MON, TUE, WED, THU, FRI - (5.30-6.30) am
ஆரம்பம் - 11.08.2009 (TUE)
By - RAJAII

**SHAMROCK**
சுச்சமோட்டை, யாழ்.

விடுமுறை விசேட வகுப்புகளுடன் :-
★ A/L கலை, வர்த்தக, கணிதம் பிரிவுகள்
ENGLISH :- Mr. G. RANGIT
★ Gr. 1 முதல் O/L வரை
★ I.C.T, G.I.T வகுப்புகள்
★ O/L DAY CLASS (ENG. PAPER CLASS)
★ ENG. MEDIUM Gr 6 To 11
★ ENG. LITERATURE
சிங்களம் (புதிய பிரிவு)

**வெளிவந்து விற்பனையாகிறது**

சைவத்திருகோவிற் கிரியை நெறி
(புதிய அம்சங்களுடன் மூன்றாம்பதிப்பு)
பேராசிரியர்
கா. கைலாஸநாதக் குருக்கள்

ஏகவிநியோகஸ்தர்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
நல்லூர் உற்சவகால சிறப்பு விற்பனை நிலையம், நல்லூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கல்விச் சுடர் 01

ஆசிரியர்கள்:-
புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன்,
கண்டி. (0812493746)



புலமைப்பரிசில் விசேட பரீட்சை வெளியீடு - 02

Model Examination For Grade Five Students for Selection to School and for the **Award of Bursaries, August 2009.**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும்

**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

✱ **முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள விவரங்களுக்கு அமைய அதனுடன் நெருங்கிய தொடர்புடைய நிகழ்வைத் தெரிவுசெய்க.**

01. காற்று வீசியது
மலரிதழ்கள் உதிர்கின்றன.
பறவைகள் கிளைகளில் ஒளிகின்றன.
1) காலை வேளையொன்றின் ஆரம்பம்.
2) மாலை வேளையொன்றின் ஆரம்பம்.
3) மழை பெய்வதற்கான ஆரம்பம்.

02. படாரென்ற வெடிச்சத்தம்
மனிதர்கள் தலைதெறிக்க ஓட்டம்.
அபயக் குரல்களின் ஓலம்.
1) கலவரம் ஒன்று மூண்டுள்ளது.
2) குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது.
3) பட்டாசு வெடித்துள்ளது.

✱ 3ஆம், 4ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருத்தமான கருத்து எது?

03. 1) சர்கஸ் வித்தை.
2) சீவனோபாயம்.
3) பொழுதுபோக்கு.



04. 1) கதிரை ஒன்று புதிதாகத் தயாரிக்கப்படுகிறது.
2) உடைந்த கதிரை ஒன்று திருத்தம் செய்யப்படுகிறது.
3) கதிரை ஒன்றின் இருக்கை பின்னப்படுகிறது.



05. பிழையாக இடம்பெற்றுள்ள வாக்கியம் எது?
1) தாதியர் நோயாளிக்கு மருந்துகொடுத்தார்.
2) மாமா நேற்றுமாலை ஊருக்குப் போனார்.
3) தங்கை தோட்டத்தில் பூப்பறித்தாள்.

✱ மிகச்சரியான கருத்தைத் தரும் வாக்கியம் எது?

06. 1) உழவர்கள் சேற்றிலே கால்வைக்காவிட்டால் எமக்குச் சோற்றிலே கைவைக்க முடியாது.
2) உழவர்கள் சோற்றிலே கைவைக்காவிட்டால் எமக்குச் சேற்றிலே கால்வைக்க முடியாது.
3) உழவர்கள் சேற்றிலே கைவைக்காவிட்டால் எமக்குச் சோற்றிலே கால்வைக்க முடியாது.

07. 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' எனும் பழமொழியால் உணர்த்தப்படும் கருத்தாவது,
1) விதைப்பதற்கு ஏற்பவே அறுவடைபெற முடியும்.
2) எந்தவொரு செயலும் செய்யும் விதத்துக்கு ஏற்பவே பயன் கிடைக்கும்.
3) எதையும் சிந்தித்துச் செய்தால் நன்மை கிடைக்கும்.

✱ **இல. 8ஆம், 9ஆம் வினாக்களில் ஒன்றோடொன்று பொருத்தமற்ற சொற் சோடிகளைத் தெரிவுசெய்க.**

08. 1) விளையாட்டுவீரன் - உதைபந்து.
2) குழந்தை - கத்தரிக்கோல்.
3) ஆசிரியர் - எழுதுகருவி.

09. 1) தென்னைமரம் - தேன்பாணி.
2) தேயிலை - பால்தேநீர்.
3) கரும்பு - சீனி.

✱ **பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| பொருளின் குறியீடு | பொருள் | விலை |
|---|---|---|
| A | அரிசி 2kg | 140.00 |
| B | பருப்பு 500g | 95.00 |
| C | கிழங்கு 1kg | 60.00 |
| D | தேயிலை 250g | 110.00 |

10. விலைகளின் ஏறுவரிசைப்படி பொருட்களை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை எது?
1) ADBC 2) CABD 3) CBDA

11. பொருட்களின் நிறைப்படி இறங்குவரிசைப்படுத்தினால் வரும் விடை எது?
1) ACBD 2) DBCA 3) ABCD

✱ **பின்வரும் படத்தைப் பயன்படுத்தி 12ஆம், 13ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**


ரூபா 28



ரூபா 20


ரூபா 28

12. 2 பேனைகள் 2 பென்சில்கள் ஆகியவற்றின் விலை என்ன?
1) ரூபா 30. 2) ரூபா 40. 3) ரூபா 10.


13. 3 பேனைகளின் விலை என்ன?
1) ரூபா 40. 2) ரூபா 39. 3) ரூபா 36.


14. எதிர்ப்பக்கங்களில் ஒரே எழுத்தைக் கொண்டதான ஒரு சதுரமுகியின் பக்கத்தோற்றம் உருவில் உள்ளது. இதனை விரிக்கும்போது கிடைக்கும் சரியான வலையுரு எது?




1)



2)



3)




15. 50 கிலோமீற்றர் இடைவெளிகளில் X, Y எனும் இரு நகரங்கள் இருக்கின்றன. அவ்விரு நகரங்களுக்கும் இடையில் A எனும் நகரம் உள்ளது. A இலிருந்து Y வரை உள்ள தூரமானது X இலிருந்து A வரையுள்ள தூரத்தின் 4 மடங்காகும். எனின், X இலிருந்து A வரையுள்ள தூரம் யாது?
1) 25 கிலோமீற்றர். 2) 40 கிலோமீற்றர். 3) 10 கிலோமீற்றர்.

16. இன்னும் 3 வருடங்களிலே ராணியின் வயது ரமணியின் வயதிலும் 3 மடங்காகும். இப்போது ரமணியின் வயது 10 வருடங்கள் எனின், ராணியின் தற்போதைய வயது என்ன?
1) 30 வருடங்கள். 2) 36 வருடங்கள். 3) 39 வருடங்கள்.


17. கொடிகள் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள கயிறு ஒன்றிலே முதலாவதாக நீலக் கொடி உள்ளது. அதனை அடுத்து முறையே சிவப்பு, மஞ்சள், வெள்ளை, செம் மஞ்சள், ஊதா ஆகிய நிறங்களில் கொடிகள் அடுத்தடுத்து உள்ளன. 6 ஆவது மஞ்சள் கொடிவரை மொத்தம் எத்தனை கொடிகள் காணப்படும்?
1) 36 2) 30 3) 33


18. 3 மனிதர்கள் சேர்ந்து ஒரு தோட்டத்தைச் செதுக்கி 4 நாட்களில் வேலையை முடித்தனர். அதே தோட்டத்தை 2 மனிதர்களைக்கொண்டு செதுக்குவதாயின், எத்தனை நாட்கள் தேவைப்படும்?
1) 6 நாட்கள். 2) 5 நாட்கள். 3) 12 நாட்கள்.

✱ **பின்வரும் கணிதச் செய்கையை அவதானித்து 19ஆம், 20ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**




இதன்படி,

19.  இன் பெறுமானம் யாது?
1) 120 2) 60 3) 30

20.  இன் பெறுமானம் யாது?
1) 90 2) 120 3) 150

21. பின்வரும் சம்பவங்களை ஒழுங்குபடுத்தும்போது ஒரு சம்பவம் புலப்படும். அச் சம்பவத்தைக்காட்டும் சரியான ஒழுங்கிலமைந்த எண்களின் விடை எது?
1) அவன் மிக்க அவதானத்துடன் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டான்.
2) சுகத் ஓர் ஏழை மாணவன்.
3) அவன் 05ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தான்.
4) சுகத் நகர்ப்புற பாடசாலையொன்றுக்குச்சென்று வருகின்றான்.
5) அவன் கிராமிய பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தான்.
1) 2, 1, 3, 5, 4 2) 2, 5, 3, 1, 4 3) 2, 5, 1, 3, 4

22. சிவகுமாரன் புதிதாக வாங்கிப் போட்ட தென்னந்தோட்டத்திலிருந்து இம்முறை நிறையக் காய்களைப் பறிக்கக்கூடியதாக இருந்தது. அத்தென்னந்தோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவதாயின் அது,
1) கடற்கரையோரத்தில் அமைந்துள்ள காணியாகும்.
2) மிகச் செழிப்பான மண்ணுள்ள காணியாகும்.
3) நல்ல மழை வீழ்ச்சியைப் பெறுகின்ற காணியாகும்.

23. பசுபதி எப்போதும் தனக்குக் கிடைக்கக்கூடிய இலாபத்தைப் பற்றியே கருத்திற் கொண்டு வேலைகளைச் செய்கின்றார். பசுபதியைப் பற்றிக் கூறுவதாயின் அவர்,
1) சுறுசுறுப்பானவர்
2) பொதுநலவாதி ஆவார்.
3) சுயநலவாதி ஆவார்.

✱ **இல. 24ஆம், 25ஆம் வினாக்களில் பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.**


24. அக்கா என்பவர் எப்போதும்
1) அழகானவர். 2) வயதில் மூத்தவர். 3) உயரமானவர்.

25. கற்பாறை ஒன்றில் எப்போதும் இருக்கக்கூடியது,
1) புல். 2) மண். 3) கல்

26. பின்வரும் எண்கோலத்தில்அடுத்து வரவேண்டிய எண் எது?
1 2 1, 2 3 2, 3 4 3, 4 5 4, 5 6 5
1) 7 8 7 2) 6 7 6 3) 7 6 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண் எது?




1) 3
2) 6
3) 9


28. கீழுள்ள உருவில் காட்டப்படுவது சமமான இடைவெளிகளுடன் வளர்ந்துள்ள தென்னை மரங்களின் வரிசையாகும். முதலாவது தென்னை மரத்திலிருந்து கடைசித் தென்னை மரம் வரையிலான தூரம் 400 மீற்றர் எனின், இரு தென்னை மரங்களுக்கிடையிலான தூரம் யாது?




1) 40 மீற்றர்.
2) 50 மீற்றர்.
3) 44 மீற்றர்.

* இல. 29 - 31 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகவும் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.

29. குவளை, வளி, திரவம்,





30. உணவு, உயரம், தாகம்,





31. வட்டம், போக்குவரத்து, காற்று,





32. அருகில் காட்டப்பட்டுள்ள திண்ம உருவில் ABCஆகிய எழுத்துகளை மறைப்பதற்காக ஒரு மாணவனால் அத்திண்ம உரு திருப்பி வைக்கப்பட்டுள்ள விதங்களில் ஒன்றில் மாத்திரம் எழுத்துகள் மறைக்கப்பட முடியாது. அவ்வுருவைத் தெரிவுசெய்க.





33. தளபாடங்களை X எழுத்தினாலும், மேசை y எழுத்தினாலும், அலுமாரி Z எழுத்தினாலும் காட்டப்படுமாயின் பின்வரும் எவ்வுரு அதனைச் சரியாகக் காட்டுகின்றது?




* இல. 34 - 40 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளைப்புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

34. தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றின் வீடுகளுக்கு தொடரான முறையில் ஒற்றை எண்களில் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்பின் முதலாவது வீட்டுக்கு 15ஆம் இலக்கம் வழங்கப்பட்டதாயின் 43ஆம் இலக்க வீடு அத்தொடர் மாடியின் எத்தனையாவது வீடாகும்? ..............................

35. பின்வரும் கணிதச்செய்கையை அவதானிக்குக.
இதிலுள்ள உருக்களுக்கு இடப்படவேண்டிய பெறுமானங்களின் அடிப்படையில் □ + ○ + △ இன் பெறுமானம் யாது?
..............................




36. 4 பென்சில்களினதும் 3 பேனைகளினதும் விலை 68.00 ரூபாவாகும். ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையிலும் 4.00 அதிகமாகும். ஒரு பென்சிலினதும் பேனையினதும் விலை என்ன? ..............................

37. ஒரு குறித்த இடத்தில் சமமான எண்ணிக்கையில் உந்துருளிகளும் முச்சக்கர வண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. அவை எல்லாவற்றினதும் சில்லுகளின் எண்ணிக்கை 25ஆகும் எனின், அங்கே நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டிகள் எத்தனை?
..............................

38. BAD என்பது CBE ஆயின், CAB என்பது .............................. ஆகும்.

* 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல் களின்படி செயலாற்றுக.

39. போராட்டம், சமாதானம், விடுதலை, சுதந்திரம், பாதுகாப்பு எனும் சொற்களில் அதிக எண்ணிக்கையிலான எழுத்துக்களைக்கொண்ட சொல்லின் இரண்டாம் எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.

40. கீழே தரப்பட்ட எண்களில் இரண்டாவது பெரிய எண்ணின் பத்தினிடத்து இலக்கத்தின் கீழ்க்கோடிடுக.
7586, 5786, 8657, 7685, 7856, 7658

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - ஆகஸ்ட் 23, 2009.

"17 ஆசிரியர்களின் பல்கோண வினாத்தாள்களை வீட்டிலிருந்தவாறே சுயமாக பயிற்சி செய்ய உதயன் கல்விச்சுடர் வழங்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்."

11/08/2009 முதல்
தேசிய ரீதியில் புகழ்பெற்ற கல்விச்சுடர் வளவாளர்கள்
யாழ் மாணவர்களுக்காக தயாரித்து வழங்கும்

மாணவர்களே! வெற்றிக்கான தொடர் பயிற்சிக்கு நீங்கள் தயாரா? பயிற்சி வழங்க நாங்கள் தயார்!

## இறுதி மாதிரி வினாத்தாள் - தொடர் பரீட்சைப் பயிற்சி

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, குருநாகல் மாவட்டங்களில் வெற்றிநடைபோடும் எமது சிறப்பு ஆசிரியர்கள் ''யாழ் மாணவர்களின் நலன் கருதி'' விசேடமாகத் தயாரித்துவழங்கும் இறுதி மாதிரி வினாத்தாள்கள் கடந்த 11/8/2009 முதல் உதயன் நாளிதழில் (வினாத்தாள்கள்-I,II என்பன ஒரே நாளில்) தொடர்ச்சியாக வெளிவருகின்றன.

**மாணவர்களே ! பெற்றோர்களே !!**

இதுவரை கற்ற அறிவைக்கொண்டு இவ் வினாத்தாள்களை சுயமாகப் பயிற்சிசெய்து மறுநாள் வெளிவரும் விடைகளுடன் ஒப்பீடுசெய்து திருத்திக்கொள்ளுங்கள். அதன் பின்பு அரசபரீட்சை வினாத்தாள்கள் உங்களுக்கு இலகுவாக இருக்கும் என்பது கல்விச்சுடரின் அசையாத நம்பிக்கை. உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள உதயன் முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளுங்கள்.

(பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் எமது பத்திரிகைகளை மொத்தமாக பெறவிரும்பின் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம்.)

கல்விச்சுடர் ஆசிரியர்: 0212223399 / 0714273035 / 0716850005
விநியோக முகாமையாளர்- 0714220005

| வளவாளர்கள் | வெளிவரும் திகதிகள் |
|---|---|
| ஜனாப். யு.எல்.எம்.சாஜித் - நிந்தவூர் | 12/08/2009 (அம்பாறை மாவட்ட முன்னணி ஆசிரியர்) |
| திரு. எஸ்.கபிலன் - வவுனியா<br>ஜனாப்.எஸ்.எம்.எம்.சஜிர்-சம்மாந்துறை | 13/08/2009 (எக்ஸ்பிரஸ் கல்வி நிலைய ஆசிரியர்)<br>(ஸ்ரார் கல்வி நிலையம்,சம்மாந்துறை) |
| திரு. என்.சந்திரகுமார் - மட்டக்களப்பு<br>திரு. எஸ்.சத்தியரூபன் - கம்பளை | 14/08/2009 (பிரபல புத்தக எழுத்தாளர்)<br>(கம்பளை சாகிரா கல்லூரி வளவாளர்) |
| திரு. வே.அன்பழகன் - யாழ்ப்பாணம் | 15/08/2009 (யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்) |
| எஸ்.ரி.முனசிங்கா (சகோதர மொழி ) | 16/08/2009 ( குருநாகல் பிரபல ஆசிரியர்) |
| திரு. ஏ.ரவீந்திரன் - வவுனியா<br>திரு. எஸ்.தீபன் - வவுனியா | 17/08/2009 (தாலிக்குளம் பாடசாலை ஆசிரியர்)<br>(பூந்தோட்டம் மகாவித்தியாலய ஆசிரியர்) |
| திரு. து.திலீப்குமார் - கொழும்பு<br>திரு. ரி.மன்மதகாந்தன் - கொழும்பு | 18/08/2009 (கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் முன்னணி ஆசிரியர்கள்) |
| திரு. ஏ.சந்திரபவன் - கொழும்பு<br>திரு. எஸ்.தயாளலிங்கம் - திருமலை | 19/08/2009 (ஜனாதிபதி விருதுபெற்ற ஆசிரியர்)<br>(ACA கல்வி நிலைய ஆசிரியர்) |
| திரு. சண்.சுதர்சன் - கண்டி<br>திரு. கி.தவகுலரெட்ணம் - கொழும்பு | 20/08/2009 (குறிஞ்சி வெளியீட்டின் பிரதம ஆசிரியர்)<br>(மேல் மாகாண ஆசிரிய ஆலோசகர்) |
| திரு. பி.அம்பிகைபாகன் - கொழும்பு | 21/08/2009 (கொழும்பு மாவட்ட பிரபல ஆசிரியர்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள்:-
புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன்,
கண்டி. (0812493746)



கல்விச் சுடர் 01

புலமைப்பரிசில் விசேட பரீட்சை வெளியீடு - 02

Model Examination For Grade Five Students for Selection to School and for the **Award of Bursaries, August 2009.**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் **புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**

**வினாத்தாள் - II** **நேரம்: 1மணி 15 நிமிடங்கள்**

* பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சில தினங்களாகப் பெய்து வருகின்ற மழை இன்னும் ஓய்ந்தபாடில்லை. மழைத் துளிகள் மேனியின் மீது விழும்போது என்ன சுகம் தெரியுமா? எங்களுக்கு மழை என்றால் கொள்ளை ஆசை. எங்கிருந்தாலும் மழைகாலத்தில் நாங்கள் வெளியே வந்துவிடுவோம். மழைநீரில் நிரம்பித்தளும்பும் பொய்கைகளிலே 'தொபுக்' என நாங்கள் குதிப்பதும், மீண்டும் தத்தித் தத்திக் கரையேறி வருவதுமாக நீந்திக் குதூகலிப்போம். எங்கள் எல்லோரதும் மகிழ்ச்சி ஆரவாரம் மனிதர்களுக்கு வேண்டுமானால் பேரிரைச்சலாக இருக்கலாம். ஆனால், எங்களுக்கென்றால் அது ஈடிணையற்ற சங்கீதக்கச்சேரி தான்.

01. மேலுள்ள விவரணத்தைக் கூறும் உயிரினம் எது?
..............................................................

02. அவை ஏன் மழைகாலத்தில் வெளியே வருகின்றன?
..............................................................

03. மனிதர்களுக்குப் பேரிரைச்சலாக இருப்பது ஏன்?
..............................................................

04. மழைகாலத்தில் பொய்கைகள் எப்படியிருக்கும்?
..............................................................

05. மேலுள்ள பந்தியிலிருந்து பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.
1) தன்மை, பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று
..............................................
2) வினைமுற்றாகவும் பெயர் எச்சமாகவும் இடம்பெற்றுள்ள சொல் ஒன்று
..............................................
3) இணைமொழிச்சொல் ஒன்று ..............................................
4) அடுக்குமொழிச்சொல் ஒன்று ..............................................
5) பெயராகவும் வினையாகவும் உள்ள சொல் ஒன்று
..............................................

06. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துக்களைப் பந்தியிலுள்ள சொற்களைத் தெரிந்து எழுதுக.
1) தடாகங்கள் - ..............................................
2) நிறைந்து - ..............................................
3) மகிழ்வோம் - ..............................................
4) இசை - ..............................................

07. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துக்களை எழுதுக.
1) விழும்போது - ..............................................
2) வருவதும் - ..............................................
3) நிரம்பி - ..............................................
4) ஆரவாரம் - ..............................................

08. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்கள் இரண்டு வீதம் எழுதுக.
1) மேனி - .............................. ..............................
2) மகிழ்ச்சி - .............................. ..............................

09. பின்வரும் தொடர்மொழிகளால் குறிப்பிடப்படுவதைத் தனிச்சொல்லில் எழுதுக.
1) நகருக்குப் புறம்பாக மக்கள் செறிந்து வாழும் இடம்
..............................................
2) சமய அனுஸ்டானத்திற்காக பிரசித்தமான மதத்தலங்களுக்கு வாகனங்களில் பயணிப்பவர்கள். ..............................................


10. பின்வரும் மரபுச் சொற்றொடர்களின் உட்கருத்தினை எழுதுக.
1) நீர்மேற் குமிழி ..............................................
2) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது ..............................................

11. பின்வரும் சிங்களப் பதங்களின் கருத்தை எழுதுக.
1) (g) கීදයක් ගයන්න? - ..............................................
2) அபி செல்லம் கரமுத (d)? - ..............................................

12. பின்வரும் வாக்கியங்களின் சிங்கள வடிவத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.
1) நீங்கள் என்ன செய்கிறீர்கள்?
..............................................
2) எனக்கு நன்றாகப் பசிக்கிறது.
..............................................

13. பின்வரும் ஆங்கில வாசகங்களின் கருத்தை எழுதுக.
1) This is my Parrot - ..............................................
2) Can I help you? - ..............................................

14. பின்வரும் பொருட்களின் ஆங்கிலப் பெயர்களை ஆங்கில எழுத்துகளில் எழுதுக.


1) 
..............................


2) 
..............................

15. பின்வரும் கருவிகளுக்கான தமிழ்ப்பெயர்களை எழுதுக.

1) 
..............................

2) 
..............................

3) 
..............................

4) 
..............................

* **இல. 16 - 30 வரையிலான வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

16. இவ்வுருவில் உள்ளவரால் செய்யப்படும் வேலை என்ன?
1) ஓலை பின்னுதல்.
2) உருக்கி ஒட்டுதல்.
3) அடுப்பு மூட்டுதல்.
4) வெட்டுக்கத்தியால் வெட்டுதல்.



17. பின்வரும் தாவரங்களில் ஆணைத்தகரை எனும் மூலிகைத் தாவரத்தைக் குறிக்கும் உரு எது?

1) 
..............................

2) 
..............................

3) 
..............................


4) 
..............................

18. நில நடுக்கத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்படும் அலகு யாது?
1) மில்லிமீற்றர். 2) ஏக்கர்.
3) கிலோமீற்றர். 5) ரிச்டர்

19. மூலவர்ணங்கள் மூன்றும் எவை?
1) வெள்ளை, பச்சை, நீலம். 2) சிவப்பு, மஞ்சள், பச்சை.
3) சிவப்பு, நீலம், பச்சை. 4) ஊதா, செம்மஞ்சள், நீலம்.

20. பழைய கட்ட்டம் ஒன்றின் உடைந்த பகுதிகளைத் திருத்தம் செய்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
1) நிர்மாணம். 2) புனர்நிர்மாணம்.
3) இடிபாடுகள். 4) சிதைவு.

21. ஒரே மாதிரியான மண்ணுள்ள இடத்திலிருந்து பெறப்பட்ட ஒரே வகையான இரு தாவரங்கள் A,B என அடையாளமிடப்பட்டு இரு வேறு இடங்களில் வைக்கப்பட்டு அவதானிக்கப்பட்டது. இதில் B தாவரம் இவ்வாறு ஆனதற்குக் காரணம் யாது?



A B

1) போதிய நீர் கிடைத்திருக்காது.
2) போதிய சூரியஒளி கிடைத்திருக்காமை.
3) சூரியஒளியின் பக்கம் திரும்பியமை.
4) காற்று வீசியமை.

22. பூப் பூக்காத தாவரம் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1) தொட்டால் வாடி. 2) குரோட்டன்.
3) அகத்தி 4) பனனம்

23. முள் முருக்கம் பூ அதிகமாகப்பூக்கும் காலம் எது?
1) ஆகஸ்ட் மாதம். 2) மே மாதம்.
3) ஏப்ரல் மாதம். 4) டிசம்பர் மாதம்.


24. பானவகைக்கு உதவும் பூவையும், பானவகைக்கு பயன்படும் வித்தையும் கொண்ட தாவரக்கூட்டம் எது?
1) வில்வம் பூ, கொத்தமல்லி. 2) மாம்பூ, எலுமிச்சை.
3) வாழைப்பூ, விளாம்பழம். 4) குப்பைமேனி, சாத்தாவாரி.

25. கிராமம் ஒன்றின் குடும்பங்களின் சுகதுக்கங்கள் இரண்டிலும் பங்களிப்புச்செய்யும் சங்கமாக இருப்பது,
1) விளையாட்டுக்கழகம். 2) சனசமூக நிலையம்.
3) கிராம அபிவிருத்தி நிலையம். 5) சேமநல சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. கொழுப்புச்சத்து அதிகமாகவுள்ள ஒரு உணவு வகை,
 1) இடியப்பம். 2) எள்ளுருண்டை.
 3) சோயா போஞ்சி. 4) பாயாசம்.

27. மூன்று குவளைகள் பின்வருமாறு ஒரு மேசையில் வைக்கப்பட்டிருந்தன.




இதன்படி சரியான கூற்றாக இருக்கக்கூடியது,
 1) குவளை Aஇலும் Cஇலும் வளி நிறைந்துள்ளது.
 2) B குவளையில் மட்டும் வளி அடைக்கப்பட்டுள்ளது.
 3) ABC ஆகிய மூன்று குவளைகளிலும் வளி உள்ளது.
 4) குவளை A இல் மட்டும் வளி உள்ளது.

28. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் முளைக்கக்கூடிய வித்துகளைத் தெரிவு செய்யலாம்?
 1) கொதிநீரில் போட்டு எடுத்த வித்து.
 2) உலர்ந்த காயிலிருந்து எடுத்த வித்து.
 3) நீரினுள் போட்டதும் அடியில் அமிழும் வித்து.
 4) நீரினுள் போட்டதும் மேலால் மிதக்கும் வித்து.

29. இருபத்து நான்கு மணிநேரமும் பொதுமக்கள் சேவைக்காக இயங்கும் நிறுவனம்,
 1) பாடசாலை 2) மருத்துவமனை.
 3) வங்கி 4) தபால்நிலையம்.

30. பின்வரும் உருக்களில் இலங்கையில் தேசிய விளையாட்டைக்குறிக்கும் உரு எது?

1)

.................................

2)

.................................

3)

.................................

4)


.................................

31. ABCD ஆகிய 4 பாத்திரங்களில் உள்ள நீரின் அளவு குறிக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கொண்டு கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.





 1) Aஇலும் Cஇலுமுள்ள நீரின் மொத்தக் கனவளவு யாது?
 ............... l ............... ml
 2) Bஇலுள்ள நீரிலிருந்து Aஇலுள்ள நீரினளவுள்ள கன அளவு நீர் அப்புறப்படுத்தப் பட்டதாயின், இப்போது Bஇல் இருக்கக்கூடிய நீரின் கன அளவு யாது?
 ............... l ............... ml
 3) D பாத்திரத்திலுள்ள நீரின் கன அளவை மில்லிலீற்றரில் எழுதுக.
 ........... ml
 4) C பாத்திரத்திலுள்ள நீரின் கன அளவை 5l ஆக்குவதற்கு இன்னும் எவ்வளவு நீர் சேர்க்க வேண்டும்? ............... l ............... ml
 5) B பாத்திரத்தில் C பாத்திரத்தை விட நீர் எவ்வளவால் அதிகமாக உள்ளது?
 ............... l ............... ml

32. வர்ணத் தரையோடுகளால் அலங்கரிக்கப்பட்ட நிலப்பகுதி ஒன்று உருவில் காட்டப் பட்டுள்ளது. வெள்ளையும் நீலமும் கொண்ட தரையோடுகளில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள பகுதி நீல நிறமாகும்.




 1) நீல நிறத் தரையோடுகளின் எண்ணிக்கையை முழு உருவின் பின்னமாகக் கூறுக.
 2) ஒரு தரையோட்டின் நீளம் 30 சென்றிமீற்றர் எனின், தரையோடு பதிக்கப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவைக்காண்க. ..................... சதுர சென்றிமீற்றர்.

33. 3 சென்றிமீற்றர் பக்கமுடைய முக்கோணங்களால் அமைக்கப்பட்டுள்ள இவ்வுருவின் சுற்றளவு யாது? ............ cm



34. கூட்டுக. 3/4 + 1/6 = ..............

35. 40 மாணவர்கள் கொண்ட வகுப்பொன்றிலே சுற்றாடல் பாடத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளைக்காட்டும் நிரல்வரைபு உருவில் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




 1) 81 - 100 வரை புள்ளிகளைப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதற்குரிய நிரலில் காட்டுக.
 2) 40இலும் கூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் எத்தனை பேர்?
 .............................
 3) 75இற்கும் 80இற்கும் இடையில் புள்ளிகள் பெற்றவர்களின் எண்ணிக்கை 5 ஆகும். 75இற்கு மேல் புள்ளிகள் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனின், எத்தனை பேர் அச்சான்றிதழைப் பெறுவர்? .........................
 4) சாந்தனி என்ற மாணவி 36 புள்ளிகளைப் பெற்றாளாயின் அவள் இடம்பெற வேண்டிய புள்ளி வீச்சு எது? .............................

36. பொருத்தமான சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக.
 1) நீரானது வெப்பமாகும்போது ............................... நிலையை அடையும்.
 2) வளியினால் ........................... செய்யமுடியும் என்பதை உருவில் காட்டப்பட்டுள்ள செயற்பாடு விளக்குகின்றது.



 3) மெல்லிய கம்பியொன்றினூடு நீண்ட நேரம் மின்னைச் செலுத்தும்போது கம்பி ...........................

37. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.
 1) பற்சில்லுத்தொகுதி காணப்படும் உபகரணம் அல்லது பொறி ஒன்றின் பெயரை எழுதுக. .............................
 2) சைக்கிள் ஒன்றை இயக்குவதற்கான சக்தி மனிதனுக்கு எதிலிருந்து கிடைக்கின்றது? .............................
 3) ஓர் அச்சுப்பற்றிச்சுழலும் தனிச்சில்லு எவ்வாறு அழைக்கப்படும்?
 .............................

38. "......... வீட்டுக் கொல்லைப்புறத்தில் குவிந்திருந்த சிரட்டைகளையும் பொலீத்தீன் கழிவுகளையும் கண்ட அப்பா எமக்கு டெங்கு நோயின் பாரதூரம் பற்றி கூறிக் கொண்டிருக்கையில் வீட்டின் முன்புற வாசலில் சுகாதாரப் பரிசோதகர் குழுவொன்று வந்து அழைப்புமணியை அடித்தனர். அவர்கள் எமது சுற்றுப்புறத்தை அவதானிக்க அனுமதி கேட்டபோது ..........
இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களை வைத்து 6 வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியம் நான்கு சொற்களுக்கு மேல் இருப்பதோடு எழுவாய், பயனிலைகளும் திருத்தமாக அமையவேண்டும்.

1) .............................................................................
.............................................................................
2) .............................................................................
.............................................................................
3) .............................................................................
.............................................................................
4) .............................................................................
.............................................................................
5) .............................................................................
.............................................................................
6) .............................................................................
.............................................................................

நிறைவுற்றது

## தரம்-5 மாணவர்களுக்கு.......

மேற்படி வினாத்தாள் தொடர்பாக தெளிவின்மை, கடினத்தன்மை மற்றும் விளக்கமின்மையோ காணப்படின் **0812493746** எனும் தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு ஆசிரிய ரின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வினாத்தாள் - I,II இற்கான விடைகள் எதிர்வரும் *11.08.2009 (செவ்வாய்க்கிழமை)* உதயன் நாளிதழில் வெளியிடப்படும்.

**தொ.இல- *0212229933, 0714273035***

மாணவர்களே
உங்களுக்கான எமது கல்விச்சுடரின் தொடர் பயிற்சியில் நீங்கள் இது வரை கற்றுத்தெளிந்த உங்களது சுய அறிவில் விடைகளை எழுதுங்கள். பின்னர் மறுநாள் வெளிவரும். எமது விடைகளுடன் ஒப்பிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org